4 பக்கங்கள் 20 காசுகள்

தீக்கதிர்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி [மார்க்சிஸ்ட்] நாளிதழ்

கதிர் 12 மதுரை 30—6—74 ஞாயிறு மலர் 151

தோழர் ... வி... 50 காசுக...
வெளியிடு:
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா...
தமிழ் மாநிலக் குழு,
6/16 பைபாஸ், ரோடு,
மதுரை-18.

சித்தார்த்த ரே ஆட்சியில் பட்டினியால் 100 பேர் சாவு

கல்கத்தா, ஜூன் 28—

சித்தார்த்த சங்கர் ரே யை முதலமைச்சராகக் கொண்டு இந்திரா காங்கிரஸ் ஆளும் மேற்கு வங்கத்தில் பட்டினியால் 10 பேர் செததனர்.

இத்தகவலை, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டதநில காங்கிரஸ் உறுபபினர் ஒருவரே கூறினுர்.

மேற்கு வங்கத்தில் பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடுகிறது என்றும் பலர் புல்லைத்தின்றே உயிர் வாழ்கின்றனர் என்றும் கூறப்பட்டது.

சிக்கிம் நாட்டில் நடப்பது என்ன?

புதுடெல்லி, ஜூன். 29—

இமாலய நாடுகளில் ஒன்ருன சிக்கிம் நாட்டிலே அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்தியாவுடன் நெருக்கமான உறவுகொள்ளவேண்டுமென்று அரசியல் சட்டத்திலேயே உறுதியாக்கிவிட வேண்டுமென்று சிக்கிம் காங்கிரஸ் கட்சியினர் கூறுகிருர்கள்.

இது இந்தியாவுடன் சிக்கிமை இணைத்து விடுவதாகும் என்று கூறி சிக்கிம் மன்னர் சோகியால் எதிர்க்கிருர்.

இந்தப் பிரச்னையில் சுதந்திர கோஷம் எழுப்பி மன்னர் ஆதரவாளர்களும், ஜனநாயக கோஷம் எழுப்பி சிக்கிம் காங்கிரஸ் கட்சியினரும் பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருக்கிருர்கள்.

சிக்கிம் நாட்டுக்கு இந்தியப் பிரதிநிதி தயாரித்துக் கொடுத்த அரசியல் நிர்ணய சாசனத்தை அப்படியே மன்னர் அங்கீகரிக்க வேண்டுமென்று சிக்கிம் காங்கிரஸ் கட்சியினர் வற்புறுத்துகிருர்கள்.

மன்னர் மறுக்கிருர்

இதை மன்னரும், மன்னர் ஆதரவாளர்களும் ஏற்றுக்கொள்ள மறுக்கிருர்கள். சிக்கிம் என்றும்போல் சுதந்திர நாடாக இருக்க வேண்டுமென்றும்—இந்தியாவின் சார்பு நாடாக சிக்கிமை ஆக்கிவிடக் கூடாது என்றும்—சுதந்திரமாக சிக்கிம் இருப்பது தான் சிக்கிமின் நலனுக்கு உகந்தது என்றும் மன்னர் தரப்பினர் வாதாடுகிருர்கள்.

மேலும், இந்திய அரசியல் அமைப்பில் சிக்கிம் பங்கெடுக்க வேண்டுமென்று சிக்கிம் காங்கிரஸ் கட்சியினர் கூறுவதானது, இது 1950-ம் ஆண்டில் இந்தியாவுடன் சிககிம் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்துக்கு விரோதமாக உள்ளது என்றும்—மற்றும் 1973 மே 8-ம் தேதி இந்தியாவுக்கும் சிக்கிமுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கை ஷரத்துகளை மீறுவதாக உள்ளது என்றும் சோகியால் மன்னர் கூறுகிருர்.

இவ்வாறு சிக்கிம் காங்கிரஸ் கட்சியினருககும, சிக்கிம் மன்னர் தரப்பினருக்குமிடையே தகராறு முற்றி நெருக்கடி நிலை ஏற்பட்டது.

மன்னர் வந்தார்

சிக்கிம் நாடு இந்திய அரசின் பாதுகாப்பின்கீழ் உள்ள நாடாகும். எனவே, சிக்கிம் தலைநகரில் இந்திய அரசின்மத்திய ரிசர்வ் படைகள் (சி ஆர் பி) முகாம் போட்டிருக்கிறது.

இந்நிலையில், விவகாரம் மன்னர் தரப்பினருக்கும் சிக்கிம் காங்கிரஸ் கட்சியினருக்கு மிடையேயுள்ள விவகாரமாக இல்லாமல் போய்விட்டது.

இந்திய ஆலோசகர் தயாரித்துக் கொடுத்த அரசியல் சாசனத்தின்மீது கருத்து வேற்றுமை ஏற்பட்டதாலும்—சிக்கிம் இந்தியாவின் பாதுகாப்பின் கீழ் உள்ள ஒரு நாடாகஇருப்பதினுலும்—சிக்கிம் தலைநகரில் இந்தியாவின் மத்திய ரிசர்வ் படைகள் முகாமிட்டிருப்பதாலும்பிரச்னைசிக்கிம நாட்டுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள முடியாத பிரச்னையாகிவிட்டது.

ஆதலால், இந்திய அரசாங்கத்துடன் கலந்து பேசுவதற்கு சிக்கிம் மன்னர் சோகியாலும் அவரது அதிகாரிகளும், இம்மாதம் 25-ம் தேதி இரவே கல்கத்தா மூலமாக புதுடெல்லிக்கு வந்துவிட்டார்கள்.

வரவேற்பு இல்லை

சிக்கிம் மன்னர் புதுடில்லிக்கு வந்த போது, விமான தளத்தில் அவரை வரவேற்க யாரும் போக வில்லை.

அவர் இதற்கு முன் இந்தியாவுக்கு வந்தபோதெல்லாம் விமான நிலையத்துக்கு இந்தியப் பிரதமரும் மற்றுமுள்ள மந்திரிகளும் முப்படைகளின் அணிவகுப்புடனும் இராணுவ கீதங்களுடனும் கௌரவித்து, அங்கவஸ்திரங்கள் பறிமாறி வரவேற்பது உண்டு.

ஆனுல் இந்தத்தடவை, அத்தகைய வரவேற்புகள் எதுவுமே இல்லையென்பது மட்டுமல்ல, 25-ம் தேதி இரவில் வந்திறங்கிய மன்னரை, இந்திய வெளிவிவகார மந்திரி சுவரண்சிங் 26-ம் தேதி மாலையில் தான் சந்தித்துப் பேசினுர்,

அவரும், சிக்கிம் காங்கிரஸ் கட்சியினரை அனுசரித்து, புதிய அரசியல் சாசனத்தை ஒப்புக்கொண்டு ஒத்துப் போகும்படி புத்தி கூறினுர்

சுவரண்சிங் ஒன்னரை மணி நேரம் பேசி விடடு, பல்கேரியாவுக்கு அவசரமாகப் புறப்பட்டு விட்டார்.

சுவரண்சிங்கைத் தொடர்ந்து, வெளிவிவகார இலாகா செயலாளர் கேவல்சிங் சோகியாலுடன் பேசினுர். பிறகு இந்திய அதிகாரிகளுடன் தான் சோகியால் மன்னர் பேச வேண்டியேற்பட்டது.

இந்த அதிகாரிகளோ, சிக்கிம் காங்கிரஸ் எம் பி கள் கொண்டு வந்துள்ள அரசியல்நிர்ணயமசோதாவில்கண்டுள்ள ஷரத்துகளை ஆதரித்துப் பேசினுர்கள். அந்த ஷரத்துக்கள் சிக்கிம் நாட்டை இந்தியாவுடன் இணைப்பதற்கான ஏற்பாடுகள் அல்லவென்றும், சிக்கிம் நாட்டின் வளர்ச்சிக்காகவே சேர்க்கப்பட்ட ஷரத்துகள் என்றும் விளக்கினுர்கள்.

எதிர்ப்பாளர்கள் தந்தி

இதற்கிடையில், காங்டாக் நகரில் சிக்கிம் காங்கிரஸ் கட்சியினர் பெருமளவில் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்கிருர்கள். மன்னரை ஜனநாயக விரோதி என்றும் — சிக்கிம் மக்களுக்குப் பயந்து கொண்டு இந்தியாவுக்கு ஓடிப்போய் விட்டாரென்றும் பொதுக்கூட்டங்களில் ஆவேசமாகப் பேசினுர்கள்.

இந்தியாவுடன் சிக்கிமை இணைக்கவில்லையென்றும்—இணைக்கிருந்தால் சிக்கிம் நாட்டுக்கென இந்தியா தனியாக ஒரு அரசியல் சட்டத்தை தயாரித்துக் கொடுத்திருக்குமா?—என்றும்—ஆனுல் சிக்கிம நாடு இந்தியாவின் பாதுகாப்பின் கீழ் உள்ள ஒரு நாடாக இருபபதால், இந்தியாவும் சிக்கிமும விசேஷ உறவுகளை உடையதாக இருக்கின்றதென்றும்—சாசனத்தில் கையெழுத்துப் போட தாமதித்துவரும் சோகியால், இனிமேல் நாட்டின்தலைவராக இருக்கவும தகுதியில்லையென்றும பேசினுர்கள்.

இந்தியாவுக்கு வந்துள்ள மன்னர் சோகியாலின் பேச்சை, பிரதமர் இந்திராகாந்தி நம்ப வேண்டாம என்று தந்தியும் கொடுத்திருக்கிருர்கள்.

நான்கு நாட்களாக இந்திரா பேசவில்லை

சிக்கிம் சுதந்திரம் பாதுகாக்கப்படுமா என்பது பற்றி விளக்கம் கேட்க, இந்தியாவுக்கு வந்தவுடனேயே, பிரதமர் இந்திராவை சந்தித்துப் பேசவேண்டுமென்று விரும்பினுர் சோகியால்.

ஆனுல் கடந்த 4 நாட்களாக, மன்னர் எவ்வளவோ முயன்றும் இந்திரா காந்தியைச் சந்திக்கமுடியவில்லை.

இந்திய அரசின் மீது சீனுவின் குற்றச்சாட்டு

சிக்கிம் சம்பவங்களைப் பற்றி சீனு தனது கருத்துக்களைத் தெரிவித்துள்ளது. இது குறித்து "இந்தியன் எக்ஸ்பிரஸ்" நிருபர் ஹாங்காங்கிலிருந்து அனுப்பிய செய்தியில், பின் வருமாறு எழுதுகிருர்.

"இமயமலை நாடான சிக்கிம் மன்னராட்சியை, இந்தியாவின் முழு ஆதிக்கத்திற்குள் கொண்டுவர இந்திய அரசாங்கம் முனைந்திருப்பதாக, இந்திய அரசின் மீது சீனு குற்றம் சாட்டியுள்ளது.

இது பற்றி "நவசீனச் செய்தி ஸ்தாபனம்" குறிப்பிடுகையில், "இந்திய அரசாங்கமானது தனது முழு ஆதிக்கத்தின் கீழ் சிக்கிம் நாட்டைக் கொண்டுவரக் கூடியமுறையில் ஒரு அரசியல் நிர்ணயச் சட்டததை சிக்கிம் அசெம்பிளி மீது திணிக்க சூழ்ச்சி செய்கிறது. இந்திய அரசின் இச் செயலை சிக்கிம மக்கள் பலமாக எதிர்த்தும், அவர்களை மதிக்காமல் இவ்வாறு திணிக்கிருர்கள்"—என்று குற்றம சாட்டியுள்ளது

தகராறுக்குரிய அந்த ஷரத்தில் கண்டிருப்பது பற்றி நவசீனச்செய்தி ஸ்தாபனம் மேலும் கூறுவதாவது:

"சிக்கிம் அரசாங்கம் தனது மக்கள் சார்பில் இந்திய அரசியல் ஸ்தாபனங்களில் பங்கு கொள்ளவும பிரதிநிதித்துவம் வகிக்கவும் கோரலாம் என்றும், மற்றும், சிக்கிமின் வளர்ச்சித் திட்டங்களெல்லாம் இந்திய அரசாங்கக் திட்டக்கமிஷனின் கட்டுக்கோப்புக்குள் கொண்டுவரப்படலாம் என்றும் அந்த ஷரத்தில் கண்டிருப்பதானது, சிக்கிம நாட்டை தன்னுடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற இந்திய அரசாங்கத்தின் விஸ்தரிப்பு ஆவலையே காட்டுகிறது"—என்று நவசீனச் செய்தி ஸ்தாபனம் குற்றம் சாட்டியுள்ளது.

காவேரி நீர் பற்றி பேச்சுவார்த்தை

சென்னை, ஜூன், 28—

தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த அமைச்சர்கள் நேற்று சென்னையில் கூடி காவிரி நீர் பங்கீடு பற்றி பேச்சு வார்த்தை நடத்தினர்.

இக்கூட்டத்திற்கு டெல்லி மந்திரி கே, சி. பந்த் தலைமை வகித்தார்.

காவேரிநீர் பங்கீடு பற்றி 1924-ம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தம்காலாவதியானதையொட்டி புதிய உடன்பாடு ஏற்படுத்துவதற்காக இந்தக் கூட்டம் நடைபெற்றது,

கர்னுடக அரசு சார்பில் முதலமைச்சர் தேவராஜ் அர்சு, கேரள அரசு சார்பில் டி. கே, திவாகரன், தமிழ்நாடு அரசு சார்பில் முதல்வர் கருணநிதி, ப. உ. சண்முகம்ஆகியோர் பேச்சு வார்ததையில் கலந்து கொண்டனர்.

நடைமுறை சாத்தியமான பிரச்சனைகள் பற்றி அலசி ஆராய்ந்து மத்திய அரசு கூறியுள்ள வழி முறைகளை அடிப்படையாகக் கொண்டேபேச்சுவார்த்தை நடந்ததாக மத்திய அமைச்சர் கே. சி. பந்த் தெரிவித்தார்,

இறுதி முடிவு அநேகமாக செப்டம்பர் மாதத்தில் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் பந்த் தெரிவித்தார்,

மேற்கு வங்க

வலது கம்யூனிஸ்டு-காங்கிரஸ் கட்சியில் குழப்பம்

கல்கத்தா. ஜூன் 28—

மேற்கு வங்க வலது கம்யூனிஸ்ட் கட்சியானது சட்டமன்ற காங்கிரஸ் கட்சியுடன் "முற்போக்கு ஜனநாயக அணியில்" கூட்டு வைத்திருந்தது. இந்த மாதம் அந்தக் கூட்டிலிருந்து வலது கம்யூனிஸ்ட் கட்சி வெளியேறி விட்டது,

காங்கிரசுடன் உள்ள கூட்டிலிருந்து பிய்த்துக் கொண்டபிறகு, அந்த வலது கம்யூனிஸ்டு கட்சியில் இரண்டுபட்ட கருத்துக்கள் மேலோங்கி, அந்தக் கட்சியையே முடக்கி வைத்திருக்கிறது.

வலது கம்யூனிஸ்டு கட்சியின் கல்கத்தா மாவட்டக் கமிட்டி ஹௌரா மாவட்ட கமிட்டி மற்றும் எல்லா மாவட்ட கமிட்டிகளும், காங்கிரசை விட்டுப் பிரியக்கூடாது என்றும் பிரிந்ததருணம் சரியல்ல வென்றும், பிரிந்தது புத்தியில்லாத செயல் என்றும்—அவசரப்பட்டு எடுத்த முடிவு என்றும் தீர்மானம் நிறைவேற்றி எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

மிட்ஞப்பூர் மாவட்டக்கமிட்டி ஒன்று தான் பூரண மெஜாரிட்டியுடன் ஆதரிக்கிறது.

இவ்வாறு மாநிலத்தலைமை ஒரு புறமும் மாவட்டத் தலைமைகள் வேறு புறமுமாக இழுபறியாக உள்ளன.

காங்கிரஸிலும் குழப்பம்

மேற்கு வங்க மந்திரிகள் மீது ஊழல் புகார்கள் எழுந்து, அதை விசாரிக்க வாஞ்சு கமிஷன் போடபபட்டிருககிறது. அந்தக் கமிஷனை ஏன் போட்டீர்கள் என்று காங்கிரஸ்காரர்களே முதலமைச்சர்ரேயை சாடுகிருர்கள்.

அதனுல் அவர், தன் மீது நம்பிக்கை தெரிவிக்கும் மகஜரில் எம். எல். ஏ. களின் கையெழுத்துக்களை வாங்கி வருகிருர்.

எதற்காக கையெழுத்து வேட்டை ஆடுகிறீர்கள் என்று கேட்டால், கட்சிக்குள் ஒற்றுமையாக இருக்கிருேம் என்பதைக் காட்டுவதற்குதான் என்று ரே கூறுகிருர்.

பஞ்சாப் பந்த்

சண்டிகார். ஜூன். 27—

விலைவாசி உயர்வு, ஊழல் ஆகியவைகளைக் கண்டித்து பஞ்சாபில் பந்த் இன்று நடைபெற்றது.

பந்தையொட்டி நடைபெற்ற ஊர்வலத்தில்கலந்து கொண்டவர்களுக்கும் போலீஸ்காரர்களுக்குமிடையே அமிர்தசரசிலும் ஜலந்தரிலும் மோதல் ஏற்பட்டுள்ளது. போலீஸ், ஊர்வலத்தினர் மீது தடியடி செய்தனர்.

அமிர்தசரசில் பந்த் ஆதரவாளர்களுக்கும், பந்த எதிர்ப்பாளர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது.

இப்பந்துக்கு அகாலிதளம் ஜனசங்கம், சம்யுக்த சோசலிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகள் அறைகூவல் விட்டிருந்தன.

இப்பந்தையொட்டி முன் எச்சரிக்கையாக பஞ்சாப் மாநிலம் முழுவதும் 173 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறுசிறு மோதலின் காரணமாக 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப் பந்த் முழுமையான வெற்றியென பந்த்துக்கு அறைகூவல் விட்ட கட்சிகள் அறிவித்தன.

கச்சத்தீவு உடன்பாடு பற்றி மேல் விவரங்கள்

புதுடில்லி, ஜூன். 29—

பாக் ஜலசந்தியிலுள்ள கச்சத்தீவு இந்தியாவுக்குச் சொந்தமா, இலங்கைக்குச் சொந்தமா என்பது பற்றி தகராறு நிலவி வந்ததும், தற்பொழுது கச்சத்தீவு இலங்கைக்கே சொந்தம் என்று இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளதும் தெரிந்ததே.

இந்த உடன்பாட்டில் நேற்று பிரதமர் இந்திரா காந்தி கையெழுத்திட்டார்.

கச்சத்தீவு இலங்கையில் இருந்து 13 மைமல் தூரத்திலும், தமிழ்நாட்டிலிருநது 12 மைல தூரத்திலும் உள்ளது. இதன் நீளம 3மைல் அகலம் 1½ மைல். பரப்பளவு 280 ஏக்கர். இங்கு குடிநீர் கிடைப்பதில்லை. இங்குபெட்ரோலும் மண்ணெண்ணையும் கிடைப்பதாகக் கூறப்படுகிறது. ஆனுல் இங்கு ஒரே பாறைக் கூட்டங்களும் சப்பாத்திக்கள்ளிகளுமதான் உள்ளன. மக்கள் இங்கு வாழ முடியாது.

நஷ்டத்தில் ஓடும் மில்களை அரசு ஏற்றெடுக்கப்போகிறது!

புதுடெல்லி. ஜூன். 28—

நஷ்டத்தில் ஓடும் (நொடிந்த) மில்களை மத்திய அரசு ஏற்று நடத்தும் கால அளவு 15 வருடததிலிருந்து 17 வருடமாக உயர்த்தப்படுகிறது. இதற்கான சட்டத் திருத்தம் செய்யப்பட்டு உடனடியாக அவசர சட்டம் பிறப்பிக்கப் போகிருர்களாம்.

மாடல் மில்ஸ் (நாகபுரி) லிமிடெட் என்ற பஞ்சாலையின் நிர்வாகத்தை அரசு ஏற்று 15 வருடம்ஜூலை 17-ந் தேதியுடன் முடிவடைகிறது.

அந்த மில் உட்பட 103 நொடிந்த மில்களை தேசியமயமாக்கும் திட்டத்தையும் ஜூலை 17-க்குள் முடிக்க முடியாது என்பதாலேயே கால அளவு உயர்த்தப்படஇருக்கிறதாம்.

சோவியத் நாட்டில் நிக்சன், சுவரண்சிங்

மாஸ்கோ, ஜூன். 28—

அமெரிக்க ஜனுதிபதி நிக்சன் கடந்த 27-ந் தேதி யன்று மாஸ்கோ வந்தடைந்தார்.

நிக்சன் வருகையை ஒட்டி உனுகோவோ விமான நிலையத்தில் சோவயத, அமெரிக்க நாடுகளின் தேசியக் கொடிகள் பறந்தன.

மாஸ்கோ, வந்தடைந்த நிக்சனை, சோவியத் கம்யூனிஸ்ட கட்சித்தலைவர் பிரஸ்நேவ், பிரதமர் கோசிஜின், ஜனுதிபதி போட்கோரனி, வெளிநாட்டு அமைச்சர் குரோமிகோ மற்றும் பல தலைவர்கள விமான நிலையத்தில் நிக்சனை வரவேற்றனர்.

நிக்சனுக்கு, சோவியத் அமெரிக்க நாடுகளின் தேசிய கீதங்கள் முழங்க சோவியத் முப்படையின் அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

மாஸ்கோ வந்தடைந்த நிக்சன், பிரஸ்நேவுடன் உச்ச கட்டப் பேச்சு வார்த்தை நடத்தவிருக்கின்ருர்.

சுவரன்சிங்

இந்திய வெளிநாட்ட மைச்சர் சுவரண்சிங், பல்கேரியா செல்லும் வழியில் (நேற்று 27 ந் தேதி) மாஸ்கோவில் 4 மணி நேரம்தங்கினுர்.

அவரை விமான நிலையத்தில் சோவியத் வெளிநாட்டு துணை அமைச்சர்கள் குஸெட்சோவும், பிரியு பியுனும இந்தியததூதர் டாக்டர் கே. கே. செல்வங்கரும் வரவேற்றனர்.

மத்திய கிழக்கு ஆசியா. தென்கிழக்கு ஆசியா. இந்திய உபகண்டம ஆகியவற்றில் நிலவும் நிலைமைகள் மற்றும் சர்வதேச நிலைமைகள் பற்றி சோவியத் தலைவர்களும சுவரண சிங்கும் பேச்சு வார்த்தை நடத்தினர்,

பிரான்சுக்கும் ஈரானுக்குமிடையே தொழில் ஒப்பந்தம்

பாரீஸ். ஜூன். 27—

அணுசக்தியை சமாதான வழியில் பயன்படுத்துவதென ஈரானும், பிரான்சும் ஒரு தொழில் நுணுக்க ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளன.

இவ்வொப்பந்தம் பாரிசில் நடைபெற்றது. இதனை முன்னிட்டு ஈரான் நாட்டு மன்னர் ஷா பாரிஸ் சென்றிருந்தார்.

ஒப்பந்தப்படி பிரான்சு ஈரானுக்கு 5 அணுசக்தி நிலையங்களை கட்டித்தரும் ஒவ்வொரு அணுசக்திநி... யமும் ஆயிரம் மெக... வாட் மின்சாரம் உற்பத்... செய்யக் கூடியவைகள்... இவைகள் 1985க்குள் கட்... முடித்துத்தரப்படும். தொழி... இயந்திரங்களும், வாயு... குழாய்களும் பிரான்சா... ஈரானுக்கு சப்ளை செ... யப்படும்.

இதற்குப்பதிலாக ஈரான்... பிரான்சுக்கு தேவையா... கச்சா எண்ணெய் வள... களை சப்ளை செய்யும்.

அணுசக்தி நிலைய... கட்டித் தருவதோடு ஈரா... தலைநகர் டெஹ்ரானி... ஒரு பாதாள ரயில்பா... அமைக்கவும, அந்நாட்டி... ரயில்வேயை மின்சாரம... மாக்கவும பிரான்சு ஈ... னுக்கு உதவும்,

இவ்வொப்பந்தத்தி... பிரெஞ்சு நாட்டு வெ... நாட்டமைச்சரும ஈரா... நாட்டு வெளிநாட்டமை... சரும கையெழுத்தி... டுள்ளனர்.

...கும்
...சை எடுத்தல்

...லவெறி |கோலத்தில் மந்திரிகள் உலகின் ...க்குகளிலும் பறந்து கொண்டிருக்கிருர்கள். ...ந்திரிகள் மட்டுமல்ல; மாநில மந்திரிகள் கூட ...? உதவி, கடனுதவி, கடனைத்திருப்பித் தர மேலும் ... தொழில் நுட்பம் கோரி உதவி.

...ல இந்தியாவுக்கும் வெளிநாடுகளில் உதவி ...ற்காகப் பறக்கும் மந்திரிமார்களுக்கு தலைமை ... மத்திய மந்திரி திருவாளர் சவாண்.

...மிழ்நாட்டு மந்திரி மாதவன் கூட யுகோஸ் ...கியாவுக்குப் பறந்து சென்று அந்த "மாநில ...சி இருப்பதாகச் கண்டுபிடித்து" "கலைஞருக்குக் ...ம்" எழுதியதுடன், தமிழ்நாட்டுக்கு யுகோஸ்லோ ...ா உதவி செய்ய வாக்களித்துள்ளதாகக் குறிப்பிட் ...ருக்கிருர்.

இந்தியாவுக்கு உதவும் நாடுகளின் சங்கம் என்ற ஒரு சங்கமே இருக்கிறது. இதில் அமெரிக்கா உள்பட பல ஐரோப்பிய நாடுகள் பங்கு வகிக்கின்றன. சமீபத்தில் திருவாளர் சவாண் தன்னுடைய பிச்சாபாத்திரத்துடன் அங்கு சென்று 1400 மில்லியன் டாலர் (அதாவது ரூ. 1015 கோடி) கடன் வாங்கி வந்தார்.

இதில் 800மில்லியன்டாலர் (ரூ. 580கோடிமேலேய)முதலாளித்துவ நாடுகளுக்கு இந்தியா தரவேண்டிய பழைய கடனையும் வட்டியையும் திருப்பித்தருவதற்காகவும், 600 மிலியன டாலர் (அதாவது ரூ. 435 கோடி) தான் ஐந்தாவது திட்டத்திற்கு திட்டச் செலவுகளுக்கென்று கிடைத்தது. இது போதுமா? போதாது.

எனவே முதலாளித்துவ நாடுகளிலிருந்து அவை விதித்த நிபந்தனைகளை இந்தியா ஏற்றபின் **அவை கூட்டாக அளித்த உதவியுடன்** தனித் தனியாக உதவிபெற தீவிர முயற்சியில ஈடுபட்டுள்ளாாகள.நமது மந்திரிகள.

அணுகுண்டு வெடித்து நமது பலம் பெருகி விட்டதாக டமாரமடிக்கும இந்திய ஆட்சியாளர்கள் குறிப்பாக அமெரிக்க முதலாளிகளுடன பல அபாயகரமான ஒப்பந்தங்கள் செய்து வருகின்றனர்.

அமெரிக்க வெளி விவகார அமைச்சர் கிசிஞ்சரை இந்தியாவுக்கு வரவழைக்க பெரு முயற்சி செய்யப்பட்டு வருகிறது. தாங்கள் கோரும் நிபந்தனைகள அனைத்தையும ஏற்ருலதான வரமுடியும என்று அமெரிக்க முதலாளிகள வற்புறுத்துகிருாகள்.

இன்று நம் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை—பெரு முதலாளிகளை வளர்க்குமகொளகை யால ஏற்பட்ட நெருக்கடியை—தீர்க்க வகையற்றுப்போன இந்திய அரசு அமெரிக்க முதலாளிகளின நிபந்தனைகளை எல்லாம ஏற்று அவர்களது தயவில தொழில் வளாச்சியில ஈடுபட முயற்சிசெய்கின்றனர். இந்த இதழின் 3-ம பக்கம இதன் விவரங்களைக் காணவும.

இதே போல், பிரிட்டிஷ், பிரெஞ்சு, ஜப்பானிய அரசுகளுடனும், முதலாளிகளுடனும தனித் தனியாகப் பேச்சு வாாத்தைகள நடக்கின்றன. இதறகாகவே மந்திரிகளின் வெளிநாட்டுப் பயணங்கள அதிகரிக்கின்றன.

இத்துடன் சோஷலிஸ்ட் நாடுகளின் உதவியையும் பயனபடுத்திக் கொள்ள இந்திய அரசு தயங்கவில்லை. சோவியத தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிருர் சவாண. ஏனைய பல சோஷலிச நாடுகளுடனும தனித் தனிப பேச்சு வார்த்தைகளும நடக்கின்றன.

சோஷலிசநாடுகள் கூட்டாக உருவாக்கி வைத்திருக்கின்றனவே "காமிக்கான்" என்ற பாஸ்பர உதவி அமைப்பு பொருளாதார நிதி அமைப்பு அங்கிருந்து ஏதாவது கிடைக்காதா என்று இப்பொழுது இந்திய அரசின் பிரதிநிதிகள படை எடுத்துள்ளாாகள்,

இவ்வாறு இந்த உலகத்தில் இந்தியா இன்று உதவிப பிச்சை வாங்குவதறகாக ஓடாத நாடே இல்லை.

நம் நாட்டின் நெருக்கடியைத் தீர்க்கும் வழி இருந்தும் அதைப்பின பற்ருது, நெருக்கடிக்கு காரணமான கள்ளப பொருளாதாரத்தையும, ஏகபோகக்கொள்ளையையும,ஒழித்துக்கட்டமுனவராமல்—வெளிநாடுகளின உதவி பிச்சையில நெருக்கடியைச் சமாளிக்க நினைப்பது—அதற்காக முயற்சிப்பது நெருக்கடியை தீர்க்கும் வழியல்ல' மேலும அதை மோசமாக்குவதே அதன விளைவாக இருக்கும.

தலையாரி வீட்டுக்குள் திருடன்

திருடர்களிடமிருந்து ஊரைப் பாதுகாக்கவே தலையாரிகள நியமிக்கப்படுவது பழங்கால வழக்கம. அந்தத் தலையாரி வீட்டுக்குள்ளேயே திருடன ஒழிந்து கொண்டால என்ன ஆகும?

அதே நிலைமைதான் ஏற்பட்டுள்ளது அண்ணா திமுகவும—வலதுகம்யூனிஸ்ட கட்சியுமசேர்ந்துநடத்திய இன வெறிஎதிர்ப்பு சர்வகட்சிக் கூட்டத்திற்கும.

இந்த நாட்டில் இன வெறி வளர்ப்புக்கு பிரதான பொறுப்பாளியாக உள்ள இந்திரா காங்கிரசை இக்கூட்டத்திற்குஅழைத்ததும ட்டுமின்றி இனவெறிஎதிர்ப்புக்கூட்டத்துக்கு தலைமை வகிக்கவைததிருக்கிருர்கள்காங்கிரசின் பிரதிநிதியை.

"மண்ணின் மைந்தர்களுக்கே வேலை, "மற்றவரெல்லாம் தங்கள் ஊருக்குப் பாகலாம" என்று கூறுகிறது மராட்டியக் காங்கிரஸ ஆட்சி.அதேபோல், கர்நாடகத்தில, மத்தியப்பிரதேசத்தில் வெளிமாநிலத்தவரை வெளியேற்ற இயக்கம் நடத்துகிருர்கள் காங்கிரஸ்காரர்கள்.

இந்திய ஒருமைப்பாட்டிற்கு விரோதமான இச்செயலைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்திரா காந்தி ...ம்கூறிஞல்இவையெல்லாம, அந்தந்தமாநிலப்பிரச்சினை... என்று பதில கூறுகிருர்.

இந்திராகாங்கிரசின் இந்தப் பாதை தேசியஒருமைப்பாட்டிற்கு நேர் விரோதமென்று தெரிந்திருந்தும், வலது கம்யூனிஸ்டும், அதிமுகவும அந்த காங்கிரசைக்கூட்டி ...ணைந்துக்கொண்டு இனவெறியை எதிர்க்கப்போகிருர் ...ளாம.

இனவெறியை எதிர்ப்பதல்ல இக்கூட்டின் நோக்... திமுக எதிர்ப்புடன் இந்திரா காங்கிரசிற்கு சேவை ...வதைப்பாதம் உடன் ...பானதற்றவாளிப்பை மூடி மறைக்... முயற்சி இது.

மாஸ்கோ பயணத்தின் மீது
கடும் தாக்குதல்

வாஷிங்டன், ஜூன். 27—

சோவியத் யூனியனேடு புதிய ஒப்பந்தங்கள் ஏற்படுத்த நிக்சன் முயற்சிப்பதுபற்றியும், அதன்காரணமாக அவர் மாஸ்கோவிற்கு பிரயாணம் மேற்கொண்டுள்ளது பற்றியும் அமெரிக்க பத்திரிகைகளும, பார்லிமெண்ட் உறுப்பினர்களும் கடுமையாக விமர்சனம் செய்துள்ளனர்.

அமெரிக்காவிற்குள்நடைபெறும் விமர்சனங்கள் நிக்சன்—பிரஸ்னேவ் பேச்சு வார்த்தைகளை யொட்டியே இருக்கின்றன.

பாதுகாப்புக்கு பாதகமாம்

வாட்டர் கேட் ஊழல் விவகாரத்தால் வலுவிழந்து போன நிக்சன், தனது நிலையை மேலும் உயர்த்திக்கொள்வதற்காக பல ஒப்பந்தங்களை பிரஸ்னேவோடு செய்யக்கூடும் என்றும் அவ்வொப்பந்தங்கள் அமெரிக்காவின் நீண்டகால பாதுகாப்புக்கு பங்கம் விளைவிப்பதாக இருக்கக் கூடும் என்று நிக்சன்மீது விமர்சிக்கின்றனர்.

மேலும் நிக்சன் சோவியத் யூனியனேடு ஏதேனும் ஒரு உடன்பாடு மேற்கொண்டால் அது இஸ்ரேலுக்கு பாதகமாக இருக்கக்கூடும் என இஸ்ரேல் ஆதரவு பத்திரிகைகளாலும் அரசியல் வாதிகளாலும் கூறப்படுகின்றன.

இஸ்ரேலியரால் பிடிக்கப்பட்ட பகுதிகளை தன்னேடு இணைத்துக் கொள்ள நினைக்கும் இஸ்ரேலின் குறிக்கோளுக்கு பாதகமாக அவ்வுடன்பாடுகள் இருக்கக் கூடும் என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

நிக்சன் மாஸ்கோவுக்குச் சென்று பிரஸ்னேவோடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் அதே சமயத்தில்தான் இஸ்ரேல் நாட்டு வெளிநாட்டு அமைச்சர் அமெரிக்காவில் தங்கியுள்ளார்.

இஸ்ரேல் நாட்டிற்கான புதிய திட்டத்திற்கு வருடம் ஒன்றுக்கு 150 கோடி டாலர் (1125 கோடி ரூபாய்) வீதம் 5 ஆண்டு காலத்திற்கு 750 கோடி டாலர் கொடுத்துதவுமாறு கேட்கவே அந்நாட்டின் வெளிநாட்டு அமைச்சர் அமெரிக்காவில் தங்கியுள்ளார்.

யூதர்கள் குடியேற்றமாம்

அடுத்து இஸ்ரேல் நாட்டின்ஜனததொகையை அதிகரித்துக் கொள்ள, சோவியத யூனியனில் வாழும்யூதர்களை இஸ்ரேலுக்கு குடியேற்றச் செய்யவேண்டும் என்பது இஸ்ரேலின் திட்டமாம்.

அத் திட்டத்திற்கு எதிராக பிரஸ்னேவோடுநிக்சன் ஒப்பந்தம் செய்து கொள்வார் என்றும் அவரது மாஸ்கோபயணம்பற்றிவிமர்சனம் செய்யப்படுகிறது.

ஆசிரியருக்கு...

போடி சர்க்கார் அஸ்பத்திரியில் டாக்டரின் குறைவு

ஐயா,

போடி வட்டாரத்தில்காலரா நடைபெறுகிறது. குறிப்பாக,எம்.எல்.ஏ கிராமமான சில்லமரத்துப் பட்டியில் அதிகமான மக்கள்இக்காலராவில் பாதிக்கபபட்டுபோடி சர்க்கார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிருர்கள். அங்கு சரியான மருந்துகள் ஸ்டாக் இல்லாததால,தனியாக ஒவ்வொருவரும் ரூ. 30 முதல் 100 வரை மருந்து வாங்கிக் கொடுக்கிருர்கள்.

அப்படி வாங்கிக் கொடுத்தும் டாக்டர்களின் அஜாக்ரதையாலும், கவனக்குறைவாலும் இதுவரை 2நாட்களில் 10பேர் இறந்துபோய் விட்டார்கள். மேலும சிலருக்கு மோசமாக இருக்கிறது. நோயாளிகள்மத்தியில் பெரும பீதியும், டாக்டர்கள் மற்ற நர்சுகள் மேல் பெரும் அதிருப்தியும் ஏற்பட்டு உள்ளது.

அரசு ஆஸ்பத்திரியில் பொதுமக்கள் சரியான கிகிச்சை பெற முடியாத அளவுக்கு அங்குமோசமாக நடந்து கொள்வதை அரசும், அதிகாரிகளும் கவனிக்க வேண்டுகிருேம்.

கொள்ளை லாபம்

காலராவில் பாதிக்கப் பட்டவர்களுக்கு டாக்டர்கள் செலின் என்ற மருந்து பாட்டில் வாங்கிவரச் சொல்கிருர்கள் இதனுடைய அவசரத் தேவை அதிகமாவதைக் கண்டு போடி மருந்துக் கடைக்காரர்கள் 5-50 வரியுடன் 6—00 ரூபாய் விற்க வேண்டிய ஒரு பாட்டிலை 7—50-க்கு விற்கிருர்கள். இதுபோன்ற சந்தர்ப்பத்தை பயன்படுததிக் கொள்ளை அடிக்கும் சமூக விரோதிகளின் மீது அரசு கடும் நடவடிக்கை எடுத்தாலன்றி இது ஒழியாது.

இவர்கள் திருந்துவார்களா? அதை நாம் எதிர்பாக்கலாமா?

இப்படிக்கு,

எல். ஆர். சங்கரசுப்பு.
சில்லமரத்துப்பட்டி.

மதுரை பைப்பாஸ் ரோடு: அரசு கவனிக்குமா?

ஐயா,,

மதுரை பைபாஸ் ரோடு அமைத்துபத்து வருடங்களுக்கு மேலாகியும் ஆரப்பாளையம்- பெத்தானியாபுரம் ஆகிய பகுதிகளை மேற்படி பைபாஸ் ரோடுடன் இணைக்கும் ரோடுகள் இன்னும் இணைக்கப்படவில்லை. அரசாங்கம் அதற்கான நடவடிக்கை எடுத்ததாகத்தெரியவில்லை.

அதற்காக மக்கள் தேவைகள் காத்திருக்கவில்லை. ஆகவே,திட்டமிட்டு அமைக்கபபடாத ரோடுகளால், ஆரப்பாளையம் முதலிய பகுதிகளிலிருந்து வண்டிகள் பைபாஸ் ரோடை அடைகின்றன.

இந்த வண்டிப் போக்குவரத்து ஹைவேஸ் இஞ்சினியருக்கு ஏன் கோபத்தை உண்டாக்கியது என்று தெரியவில்லை.

அரசு ரோடு அமைப்பதற்கு முன் வண்டிகள் வந்து சேரலாமா? அப்படி ஒரு பாதையில் வண்டிகள் வந்து ஹைவேஸ் ரோடை அடைய அனுமதிக்க முடியாது என்றுமமுடிவு செய்துவிட்டார் போலும்,

அந்த பாதைகளில் பள்ளம் படுகுழிகளை வெட்டிப் போட்டு, வண்டிகள் போவதை தடுக்கும்படி, ஹைவேஸ் இஞ்சினியர் உத்தரவிட்டுள்ளாராம்.இது ஒரு துக்ளக் உத்தரவு.

இதனல், அப்பகுதியில் நடந்து போய் வரும் பொது மக்கள் அந்தப்பள்ளப் பகுதிகளில்விழுந்து விடுகிருர்கள். இந்தப் புதிய இடைஞ்சல் தவிர்க்கப்பட வேண்டாமா?

சரியான ரோடு அமைக்காதது அரசின் குற்றமே தவிர மக்கள் குற்றமல்ல. புதிய தற்காலிக பாதையில் செல்வது குற்றமல்ல, ஏன், வண்டிப் போக்குவரத்தை தடை செய்ய வேண்டும்? மக்கள் ஏன் அவதிப்பட வேண்டும்? பள்ளம் பகுதிகள் மூடப்படுமா? சரியான பாதைகள் விரைவில் அமைக்கப்படுமா?

இப்படிக்கு

எஸ். அலாவுதீன்
மார்க்சிஸ்ட் கம்யூ. கட்சி
மதுரை.

நெல்லை கூட்டத்தில் பி. ராமமூர்த்தி

திருநெல்வேலி, ஜூன். 28—

கடந்த 25-ந்தேதிதிருநெல்வேலி காந்தி சதுக்கத்தில் நடந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுக்கூட்டத்தில்,கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர் தோழர் பி ராமமூர்த்தி கலந்து கொண்டு பேசினுர்.

அவர்பேசும்போது இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வுக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும்,நெருக்கடிக்கும் மத்திய காங்கிரஸ் அரசாங்கமே காரணம் என்று குற்றம் சாட்டினுர்.

தொழிலாளர்களுக்கும் மற்ற பகுதி உழைப்பாளர்களுக்கும் இரண்டு வருடங்களுக்கு ஊதிய முடக்கம் செய்ய வேண்டும் என்று கூறும் இந்திரா, மக்களுடைய அத்தியாவசியப் பண்டங்களைப் பதுக்கி வைப்பவர்களுக்கும், வர்த்தகச் சூதாடிகளுக்கும் எதிராக சுண்டுவிரலைக்கூட அசைக்கத் தயங்குவது ஏன்? என்று கேட்டார்.

தற்போது இந்தியா முழுவதும் "மண்ணின் மைந்தர்க்கே வேலை" என்று கோஷம் வைத்தும் சிவசேனை, லட்சித் சேனை என்ற அமைப்புகளை உருவாக்கியும் உழைப்பாளர்கள துஒற்றுமையைச் சீர்குலைக்க அந்தந்த மாநிலகாங்கிரஸ்ஆட்சியாளர்கள் செய்து வரும சூழ்ச்சிகளைக் கண்டித்தார்.

தமிழர் பேரவை

அதே போன்று தமிழகத்திலும், தமிழர் பேரவை, படை, சேனை, அமைப்புகளை வைத்துக் கொண்டு தமிழகத்தில் உள்ள கேரள மக்களுக்கு எதிராக வன்முறை வெறியாட்டங்கள் நடந்து வருவதையும்—திரைப படங்களைநடக்க விடாதபடி தடுத்து வரும் நடவடிக்கைகளையும்கண்டித்தார் தோழர் பி. ராமமூர்த்தி.

இரயில்வேத் தொழிலாளர்களின் போராட்டம் பற்றியும் அப்போராட்டத்தில் வலது கம்யூனிஸ்டுகளின் துரோகத்தனமை பற்றியும் விளக்கி அம்பலப்படுததினுர். மத்திய அரசின் பழிவாங்கும் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டித்தார்.

இக்கூட்டத்திற்கு, கட்சியின் நெல்லை மாவட்ட தெற்கு பிராந்திய கமிட்டி செயலாளர் தோழர் எஸ். மாடசாமி தலைமை வகித்தார்.

மற்றும் கட்சியின் மாவட்டச் செயலாளர் சு. பால விநாயகம், சண்முக வேலாயுதம், என். எஸ்.மணி ஆகியோரும பேசினர். கூட்டத் துவக்கத்தில் புரட்சிப் பாடகர் தோழர் மகராஜன் இயக்கப் பாடல்கள் பாடினுர்.

கூலியை உயர்த்தக்கோரி மாதவரம் பருப்பு தொழிலாளர் வேலை நிறுத்தம்

சென்னை, ஜூலை. 28—

சென்னை மாதவரம் என். ஸ்ரீனிவாசநாடார் பருப்பு, துவரை தயாரிக்கும் கமபெனியில் கடந்த 26ந் தேதி முதல் வேலைநிறுத்தம் நடைபெறுகிறது.

கோரிக்கைகள்

தற்போது தரப்படும் மிகக் குறைந்த தினககூலியை உயர்ததவும், பழிவாங்கப் பட்ட இரு தொழிலாளிகளை வேலைக்கு எடுததுக் கொள்ளக் கோரியும், புதிதாக காண்டிராக்ட முறையை புகுத்துவதை ஆட்சேபிததும, கோரிககைகள சம்பந்தமாக லேபர் ஆபீசருககு முன்னுல் நடைபெறும விசாரணையில் பங்கேறகாததை ஆட்சேபித்தும ஆணகளும, பெணகளும வேலைநிறுததம செய்கின றனர்.

இத்தொழிலாளிகள் சி ஐ டி யூ தொழிற சங்கததை சோாந்தவாகள.

தானியமாக நிலவரி வசூல் பீகார் மாநிலத்தில்

பாட்னு, ஜூன். 29—

பீகார் மாநிலததில் நிலவரியை தானியமாகவே வசூலிப்பது என்று அரசு முடிவு செய்திருப்பதாக ரெவின்யூ மந்திரி கேதார் பாண்டே, சட்டசபைக் கூட்டத்தில் அறிவிததார்.

பிசினஸ் என்பதே ஊழல் ஆகிவிட்டது
இந்திரா கூறுகிருர்

புதுடெல்லி, ஜூன். 28—

இந்தியாவில் உள்ள வாணிப முறையே ஊழலுக்கு உறைவிடமாக அமைந்துள்ளது என்றும—ஊழலே இல்லாமல் வாணிபம் செய்வது எனபது மிகவும் கடினமாகும் என்றும் பிரதமர் இந்திரா காந்தி கூறினுர்.

அண்மையில், "நியூஸ் வீக்" என்ற அமெரிக்கப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்தான் இவ்வாறு கூறினுர்.

இப்படி ஊழல்கள் இருப்பதினுல் பணவீக்கம் ஏற்படுகிறது. இந்த ஊழல்களை ஒழிப்பதற்கு அரசு உருப்படியான நடவடிக்கைகளை எடுக்காமல் எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என்று வெட்கமில்லாமல் வெளிப்படையாகப் பேசுவது மானக்கேடாகும்.

தவறு செய்த அதிகாரிகள் மீது
தயங்காமல் நடவடிக்கை எடுப்பாரா?
முதலமைச்சர் கருணநிதிக்கு மதுரை மக்கள் கேள்வி

"எந்த அதிகாரி தவறு செய்கிருர் என்று நடுநிலையோடு, சரியான ஆதாரம் காட்டி எந்தவிதமான குற்றச்சாட்டை நீங்கள் அளித்தாலும் சரி, வேறுஎந்தக் கட்சிக்காரர்கள் அளித்தாலும் சரி, அந்த அதிகாரியின் மீது நடவடிக்கை எடுக்க என்றைக்கும் நான் தயங்கியது இல்லை"—என்று 25—6—74.ல் திருவொற்றியூரில் நடந்ததோர் கூட்டத்தில் முதலமைச்சர் மு. கருணநிதி பேசியுள்ளார்.

இது உண்மைதானு?

மதுரை நகர கைத்தறி நெசவுத் தொழிலாளர்களும், பொதுமக்களும முதலமைச்சரிடம் கேட்கிருர்கள்.

ஜூன் மாதம் 1-ம் தேதியன்று மதுரை முனிச்சாலையிலுள்ள சி.ஐ.டி யூ. அலுவலகத்தில படுத்துக் கொண்டிருந்த தொழிறசங்கத தலைவர் வி.பாலகிருஷ்ண

வி. பாலகிருஷ்ணன், ஜே. எஸ். கிருஷ்ணமூர்த்தி

னையும், வீட்டில் இருந்த நெசவாளர் தலைவர் ஜே. எஸ். கிருஷ்ணமூர்த்தியையும் அடித்துச் சித்திரவதை செய்து—செருப்பால் அடிக்க வைத்து—மூத்திரம் பெய்தும் கொடுமை செய்த போலீஸ் அதிகாரிகள் இன்ஸ்பெக்டர் இராமகிருஷ்ணன் மீதும், சப்இன்ஸ்பெக்டர் காளிமுத்து மீதும், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

எந்தக் கட்சிக்காரர்கள் ஆனுலும் சரி. சரியான ஆதாரத்துடன் குற்றம் சாட்டினுல் அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுப்பேன் என்று கூறுவது மெய்யானுல் பத்தாயிரம்பேர் கலந்து கொண்ட பொதுக்கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பழைய காங்கிரஸ், ஆளும் காங்கிரஸ், ஜனசங்கம், வலது கம்யூனிஸ்ட், அதிமுக ஆகிய பல்வேறு கட்சி தலைவர்களும் குற்றம் சாட்டினுர்களே, அதுபற்றி முதலமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்தார்?

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு கமிட்டி செயலாளர் ஏ. பாலசுப்ரமண்யம் கோரிக்கையாக இது குறித்து எழுதிய கடிதத்தின் மீது முதலமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்தார்?

தமிழகம் முழுவதும் சிஐடியூ, விவசாயிகள் சங்கம், மாணவர் சங்கம், மாதர்கள் சங்கம் ஆகியவை கண்டனத் தீர்மானங்கள் அனுப்பினவே, அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்?

பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கையெழுத்திட்டு மதுரை கலெக்டரிடம் கொடுத்த மனுவின் மீது, முதலமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்தார்?

சரியான ஆதாரத்துடன் குற்றம் சாட்டுகிருேமா அல்லவா?

நடுநிலையோடு குற்றம்சாட்டுகிருேமா அல்லவா?

இவை பற்றி ஒரு பகிரங்க விசாரணை நடத்தி, சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் உண்மை என்று நிரூபிக்கப்பட்டால் முதலமைச்சர் கருணநிதி, அந்த அதிகாரிகள் மீது தயங்காமல் நடவடிக்கை எடுப்பாரா?

சுதந்திர சீமையிலே ஒரு ஆஸ்பத்திரி

அலகாபாத், ஜூன். 27—

இங்குள்ள சுவரூப் ராணி நேரு ஆஸ்பத்திரியில் டிப்தீரியா நோயால் பாதிக்கப்பட்ட குழந்தையொன்று சேர்க்கப்பட்டது.

ஆபரேஷன் செய்தால்தான் குழந்தையைகாப்பாற்ற முடியும். ஆனல் ஆபரேஷன் செய்யவேண்டிய வேளையில் பாழும் மின்வெட்டு வந்து தொலைந்தது. டார்ச்லைட் வெளிச்சத்தில் ஆபரேஷன்செய்ய டாக்டர் தயார். ஆனல் மின்சாரமின்றி ஆபரேஷனுக்குத் தேவையான மற்ற கருவிகளை இயக்க முடியாது.

டாக்டரின் கண்முன் குழந்தை துடிதுடித்து செத்தது. டாக்டர் எதுவும் செய்ய முடியாது கைகட்டி நின்ருர்.

இந்த ஆஸ்பத்திரியில் மின்வெட்டு மட்டுமல்ல; உயிர் காக்கும் மருந்துகளும் இல்லை. பஞ்சு கிடையாது. ஸ்பிரிட், பிராண வாயு போன்றவையும் ஸ்டாக் இல்லை.

"உயிரில் அக்கறை உள்ளவர்கள் இந்த ஆஸ்பத்திரிக்கு வரவேண்டாம்" என்று இந்த ஆஸ்பத்திரியிலுள்ள இளம் டாக்டர்கள் சங்கம் அறிவித்துள்ளது,

இந்தியா[illegible]

ஏகபோக அமெரிக்க கம்பெ[illegible]

புதுடெல்லி, ஜூன். 21—

ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கேந்திரமான துறைகளில்தாம் முதலீடு செய்யும் தொகை விஷயத்தில் ஏராளமான சலுகைகளைப்பெறுவதற்காக அமெரிக்க ஏகபோகக் கம்பெனிகள் இந்திய அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து வருவதாகத் தெரிகிறது.

இந்தியப் பொருளாதாரத்தின் முக்கியமான துறைகளில் அமெரிக்க மூலதனத்தை முதலீடு செய்ய வைப்பதற்காக இந்தியாவிலுள்ள அமெரிக்க ஆதரவுக் கோஷ்டி சமீபகாலமாக மிகவும் மும்முரமாகப் பாடுபட்டு வருகிறது.

இந்தக் கோஷ்டி இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக, இன்று இந்தியாவில் நிலவிவரும் கடுமையான பொருளாதார நிலைமையையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்பார்க்கிறது.

நெருக்கடி

இந்திய அரசின் கொள்கைகளின் விளைவாக இந்தியா இப்போது கடுமையான அன்னியச் செலாவணிப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளது; திட்டங்களை நிறைவேற்றுவதற்காகும் அடக்கச் செலவின் மதிப்பு மிகப்பெரும அளவுக்கு அதிகரித்து விட்டது. அதனல் நகல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள திட்டங்கள் பல கைவிடக்கூடும். இந்தச் சந்தர்ப்பத்தில், அன்னிய மூலதனத்தை வரவழைக்கும் விஷயத்தில் இந்திய அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதில் அமெரிக்கா வெற்றி பெற்றது.

இதன் விளைவாக, அன்னியக் கம்பெனிகள், முக்கியமாக அமெரிக்கக் கம்பெனிகள், விலை, தாயகத்துக்கு அனுப்பக் கூடிய பங்குத்தொகை நிர்வாக முறைமை முதலிய பல விஷயங்களில் பற்பல சலுகைகளை இந்திய அரசாங்கத்திடம கோரி வருகின்றன.

அந்நியக் கம்பெனிகள்

உதாரணமாக, இந்தக்கம்பெனிகளில் பல, தாமே பெரும் பங்குதாரராக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றன. அன்னிய முதலீட்டாளர்களின் பங்குத் தொகையை 40 சதவீதமாகக் கட்டுப்படுத்துவது என்ற இந்திய அரசாங்கத்தின் கொள்கை கைவிடப்படுகிறது.

உதாரணமாக, நூற்றுக்குநூறு ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களில் பங்கெடுக்க முன்வரும் அன்னியக் கம்பெனிகளுக்கு பெரும்பான்மைப் பங்கை அனுமதிப்பது என்ற யோசனையை, பெருளாதார விவகார இலாகா கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது. தமது உற்பத்திப் பொருள்கள் அனைத்தையும் ஏற்றுமதி செய்ய ஒப்புக் கொண்டுள்ள அன்னிய கம்பெனிகளுக்கும் அன்னிய பங்குகளைக் குறைப்பது என்ற விதிமுறையிலிருந்து விலக்களிக்கப்படலாம்.

அமெரிக்கக் கம்பெனிகள்

அன்னியக் கம்பெனிகள், குறிப்பாக அமெரிக்கக் கம்பெனிகள் பல, இந்தியாவில் கூட்டாகத் தொழில் நடத்துவதை பற்றிப் பல யோசனைகளைத் தெரிவித்துள்ளன. இந்த யோசனைகள் இப்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகின்றது. இந்த கம்பெனிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தையின் போது இந்த கம்பெனிகள் இந்தியாவில் தாம் முதலீடு செய்யும் மூலதனத்தைத் தமக்கு அதிக பட்ச லாபம் கிடைப்பதற்கு இந்திய அரசாங்கம் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து வருகிறது.

ஏற்கெனவே மிகப்பெரும் ஏகபோக அமெரிக்கக் கம்பெனியான ஜெனரல் மோட்டார் கம்பெனி, பிர்லா இந்துஸ்தான் மோட்டார் கம்பெனியோடு கூட்டுச் சேர்ந்து இந்திய நாட்டின் மோட்டார் தொழில் துறையையே கைப்பற்றிக் கொள்ள முனைந்திருக்கிறது.

இந்துஸ்தான் மோட்டார்சில் ஜெனரல் மோட்டார்ஸ் 33 3 சதவீதச் சாதாரணப் பங்குகளைப் பெற்றிருக்கும் என்றும் இதற்குப் பிரதியாக ஜெனரல் மோட்டார் டிரக் வண்டிகளை உற்பத்தி செய்வதற்கு சாத்தியமான எல்லாத் தொழில் நுட்ப ஞானத்தையும் வழங்க வேண்டும் என்றும் இந்துஸ்தான மோட்டார்ஸ் யோசனை தெரிவித்துள்ளது.

அன்னிய முதலீடு

இதில் விசித்திரமான விஷயம் என்ன வென்ருல் அந்நிய முதலீடு பற்றிய யோசனைகளைப் பரிசீலித்துமதிப்பீடுசெய்ய வேண்டிய அன்னிய முதலீடு பற்றிய இலாகா இந்துஸ்தான் மோட்டார்சும—ஜெனரல் மோட்டார்சும் கூட்டுச்சேர்வது பற்றி அந்தக் கம்பெனிகள் செய்த முடிவையே ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்துஸ்தான் மோட்டார்ஸ்— ஜெனரல் மோட்டார்ஸ் கூட்டு பற்றியயோசனை பற்றி முடிவெடுத்த முறையானது, அமெரிகக மூலதனத்தின் நன்மைக்காக, 'சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க எஜென்சி' (யு எஸ் ஏ ஐ டி) எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதையேபுலப்படுத்துகிறது.

கடன் ஒப்பந்தம்

ஒரு கட்டத்தில், ஆலையின் விஸ்தரிக்கபட்ட பகுதி முழுமையான திறன் படைத்த தனி யூனிட்டாக மாற்றப்படும் என்ற யோசனை தெரிவிக்கப்பட்டது. இந்த அதிகாரப்பூர்வமான யோசனையை இந்துஸ்தான் மோட்டார்ஸ் ஒப்புக்கொள்ளவில்லை. யு எஸ் ஏ ஐ டியுடன் தாம்செய்து கொள்ளும் கடன் ஒப்பந்தப்படி, யு எஸ் ஏ ஐ டி க்குக் கடன் தொகை முழுவதையும் கொடுத்துத் தீர்த்தாலன்றி, கம்பெனியின் பங்கு அமைப்பில் எவ்வித மாற்றமும் செய்ய முடியாது என்ற காரணத்தால், இந்த அதிகாரபூர்வமானயோசனையை ஏறக இயலாது என்று கூறியது. இந்துஸ்தான் மோட்டார்ஸ் யுஎஸ்ஏஐடிககு பதினைந்தரைக்கோடி ரூபாய்கொடுக்க வேண்டியிருப்பதால், பங்கு அமைப்பில் எவ்வித மாறுதலையும் ஏற்படுத்த இயலாது.

இதில் விசித்திரம் என்னவென்ருல் இந்துஸ்தான் மோட்டார்ஸ் கம்பெனியில் ஜெனரல் மோட்டார்ஸ் கம்பெனி நிதி செலுத்திப் பங்கு பெறுவதை யுஎஸ்ஏஐடி ஆதரித்தது; அதே சமயம் பிர்லாக்களும தமது கமபெனியில் ஜெனரல்மோட்டார்ஸ் சாதாரணப் பங்கு தொகைகளைக் கொண்டிருக்க இந்திய அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமஎன்று அரசாங்கத்தை நெருக்கி வந்தது.

உண்மையில், அமெரிக்கக் கம்பெனிகள் கோரிய சலுகை, இந்தியாவில் அவை முதலீடு செய்யும் மூலதனததுக்கு அதிகபட்ச லாபத்தைப் பெ[illegible] அமெரிக்கக் கொள்கைக் கேற்[illegible]ளது. அண்மையில் தான் இ[illegible]லுள்ள அமெரிக்கத் தூதர் மொய்[illegible] பின்வருமாறு கூறுகிருர்.

அமெரிக்க தனியார் து[illegible]

"இந்தியாவில் வ[illegible]களைப்பெற அமெரிக்கத்த[illegible] துறைதான் முயன்றுவருக்[illegible] என்ற அளவுக்குச் சம்[illegible]பட்டவர்கள் அனைவருக்[illegible] இதற்குள் விஷயம் தெளிவ[illegible] இருக்கும் என்று நான் கரு[illegible]கிறேன். அந்த வாய்ப்புக்கள் உலகப் பொருளாதாரத்தில்வேறு இடங்களில் கிட்டக்கூடிய அளவுக்குப் பொருந்திய விவேகமான லாப விகிதத்தை வாக்களிக்க வேண்டும்."

சுரண்டலுக்கு அனுமதி

இதன் பொருள் என்ன?

அமெரிக்க முதலீட்டுக்கு இந்தியா வாய்ப்புக்களை அளிக்க விரும்பினல், அமெரிக்க முதலாளிகளால் சுரண்டப்படுவதற்கும் இந்தியா ஒப்புக் கொள்ள வேண்டும, லத்தீன் அமெரிக்க நாடுகளில் நடந்ததைப்போல் அமெரிக்கநவீன-காலனியாதிக்கம் இங்கு மேலோங்கி மேலாதிக்கம் செலுத்துவதற்கும்சம்மதிக்க வேண்டும் என்பதே இதறகு அர்த்தமாகும.

இந்தியாவிலும் சரி, பிற வளரும் நாடுகளிலும் சரி, செயல்பட்டு வரும் அமெரிகக கம்பெனிகளின இயல்பானது, இந்தக் கமபெனிகள் ஒரு தன்னிறைவான பொருளாதாரத்தைக் கட்டியமைக்க வேண்டும் என்று வளரும் நாடுகள் மேறகொண்டுள்ள குறிக்கோளை, துச்சமாக மதிக்கின்றன என்பதையே தெளிவுபடுத்துகினறது.

தன்மானமுள்ள எந்தவொரு சுதந்திர நாடும், இந்தியாவில் முதலீடு செய்ய அமெரிக்க முதலாளித்துவக் கம்பெனிகள் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள முடியாது. எனினும் இந்திய ஆட்சியாளர் இந்த அவமானகரமான நிபந்தனைகளையும ஏறகத் தயாராகி விட்டார்கள்.

50 சதவீத கூலி உயர்வு பனியன்தொழிலாளர் கோரிக்கை

திருப்பூர் ஜூன் 27—

ராக்கெட் வேகத்தில் உயர்ந்து வரும் விலைவாசியைச் சரிக்கட்டும் வகையில் பனியன் தொழிலாளர்களுக்கு 50 சதவீத சம்பள உயர்வும், விலைவாசிப் புள்ளி ஒன்றுக்கு 30 பைசா பஞ்சப்படி அளிக்க வேண்டும் என்று இங்குள்ள பனியன் அண்ட் பொதுத் தொழிலாளர் சங்கம் (சி ஐ டி யூ) வற்புறுத்தியுள்ளது.

இச்சங்கத்தின் பேரவைக் கூட்டம் கடந்த 20-ந் தேதியன்று பி. ஆர். நிலையத்தில் தோழர் பி, ராமசாமி தலைமையில் நடந்தது.

செயலாளர் ஜி. காளியப்பன், ஆண்டறிககையையும் பொருளாளர் அ. பழனிச்சாமி வரவு—செலவுக் கணக்குகளையும் சமர்ப்பித்தனர்.

தமிழ் மாநில சி ஐ டி யூ தலைவர் தோழர் கே. ரமணி இக்கூட்டததில் கலந்து கொண்டு தொழிற்சங்கக கடமைகள் குறித்துப் பேசினர்.

இக்கூட்டத்தில் பவர்லூம் தொழிலாளர்களுக்கு 50 சதவீத கூலி உயர்வும பஞ்சப்படியும் அளிக்க வேண்டும என்று வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1974-75 ம் ஆண்டுக்கான நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவராக கே. எஸ்.கருப்புசாமியும், துணைத்தலைவர்களாக பி. ராமசாமி, என். ஆறுமுகம ஆகியோரும். செயலாளராக ஜி. காளியப்பனும், துணைச்செயலாளர்களாக எம். நஞ்சப்பன், கே. கங்கவேல்ஆகியோரும் பொருளாளராக அ. பழனிச்சாமியும நிர்வாகக்குழு உறுப்பினர்களாக சி. கோவிந்தசாமி, கே. ராசப்பன், எஸ். பழனிச்சாமி ஆர்.கோவிந்தசாமி, பி, பழனிச்சாமி டி. நடராஜ், என். பழனிச்சாமி, இ. பி. ஜெயகிருஷ்ணன் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழக அணைகளில் மோசமான நீர் நிலைமை

குறுவை சாகுபடி பெரிதும் பாதிக்கப்படும்

சென்னை, ஜூன். 27—

தமிழகத்தின் பல்வேறு அணைகளில் குறிப்பாக மேட்டூர் அணை, பரம்பிக்குளம் ஆழியார் அணை, மற்றும் குமரி மாவட்டத்தில் உள்ள அணைகளிலும் நீர் மட்டம் மிகவும் குறைவாக உள்ளது. இது குறித்து தமிழக பொதுப்பணிததுறை அமைச்சர் ப. உ. சண்முகம் கவலை தெரிவித்துள்ளார்.

மேட்டூர் அணையில், கடந்த ஆண்டு இதேசமயத்தில 91 அடி நீர் இருநதது. அதனலவிவசாயததிற்கு நீர் திறந்து விடப்பட்டது.

ஆனல் தற்போதோ 21 அடி நீர்தான் இருக்கிறது. எனவே தண்ணீர் திறந்து விடப்படாததால் குறுவை சாகுபடி பெரிதும் பாதிக்கப்படும்.

தென்மேற்குப் பருவமழை காலதாமதமாக ஆரமபித்ததாலும், அதுவும் சரியானபடி இல்லாததாலும் பல அணைகளில் தண்ணீர் இல்லாமல் வறட்சி நிலவுகிறதாம்.

ஏற்கனவே, மின்வெட்டு. உரத்தட்டுப்பாடு, டீசல் தட்டுப்பாடு போன்றவற்ருல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள சிறு விவசாயிகளின் நிலைமை, மேலும் மோசமாகும்.

வாலிபர் சங்க கிளை அமைப்பு

குழித்துறை. ஜூன். 28—

குமரி மாவட்டததிலுள்ள மாராயபுரம் என்னுமிடத்தில் சோசலிஸ்ட் வாலிபர் சங்க கிளை அமைப்புகூட்டம் நடைபெறறது.

இக்கூட்டத்தில் மாவட்ட குழு சார்பில் தோழர் பி. கோபிதாஸ் கலந்து கொண்டார்.

கூட்ட முடிவில் தோழர் கே தங்கமணியை செயலாளராகவும், தோழர் கே. செல்லசாமியை தலைவராகவும் கொண்ட கிளை அமைக்கப்பட்டது.

கைத்தறி, விசைத்தறி தொழிலாளர் வெற்றி

தளவாய்புரம், ஜூன். 26—

தளவாய்புரம கைத்தறி, விசைத்தறி தொழிலாளர்கள் கூலி உயர்வு மற்றும்பல கோரிக்கைகளுக்காக நடந்த போராட்டத்தில் கீழ் கண்டபடி ஒப்பந்தம் செய்யப்பட்டது.

விசைத்தறித் தொழிலாளர்களுக்குரூபாய்க்கு15சதம் கூலி உயர்வும் 8 மணி நேர வேலையை அமுல் நடத்த வேண்டுமெனவும்,

கைத்தறி தொழிலாளர்களுக்கு ரூபாய்க்கு 25 சதம் கூலி உயர்வு கொடுக்க வேண்டுமெனவும்,

விசைத்தறி தொழிலாளர்களுக்கு பண்டிகை விடுமுறை சம்பளம் வருடத்திற்கு 9 நாள், நாள் ஒன்றுக்கு ரூபாய் 4—00-ம்,

கைத்தறி தொழிலாளர்களுக்கு பண்டிகை விடுமுறை சம்பளம் ரூ.4-00-ம்.

கைத்தறி, விசைத்தறிகளில் சுண்டு சார் சுற்றும் பண்டிகை விடுமுறைச் சம்பளம் ரூ. 1-50.

கைத்தறி, விசைத்தறி தொழிலாளர்களுக்குபோனசாக ரூ. 30 ம, கண்டு தார், டப்பா கண்டு சுற்றும் தொழிலாளர்களுக்கு போனசாக ரூ.10-ம்,

கைத்தறி, விசைத்தறிசம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் அனைவருக்கும் வாரச் சம்பளம் கொடுப்பதெனவும்,

ஒப்பந்தத்தை மீறுதல்

தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் முதலாளிகள் சங்கத் தலைவர்களுக்கும் 26—5—74-ல் ஒப்பந்தம் கையெழுத்தானது.

தொழிற்சங்கச்சார்பில் தோழர்கள் எம். தங்கச்சாமி, ஏ. எஸ், பழனிச்சாமி, த. ஐ. காசிமணி, முதலாளிகள் சங்கச்சார்பில் திரு. பி. எம். எம் ஆதிநாராயண நாடார், திரு, பி. எம். எஸ். எஸ். ராமசாமி நாடார் ஆகியவர்கள் கையெழுத்திட்டார்கள்.

8—6—74-ல் ஒப்பந்தத்தை மீறியதால் முதலாளி சங்கத்ததலைவர் பி. எம். எம் எ. அனபழகன், பி. எம். எம். ஆதிநாராயண நாடார், ஏ. எஸ். பி. ராமசாமிநாடார் ஆகியவர்களை ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் "கெரோ" செய்தார்கள் உடனடியாக ஒப்பந்தத்தை அமுல் நடத்தும் வரை எங்கும் போக விடாமல் சுமார் 1 மணி நேரம் வரை கெரோ போராட்டம் நடந்தது.

உடனடியாக கணக்கரை அழைத்து ஒப்பந்தத்தை அமுல்நடத்தும்படி போன் செய்யச் சொன்னர். உடனே ஒப்பந்தப்படி அமுல் நடத்தப்பட்டது.

ஏ ஐ டி யூ சி கருங்காலி வேலை

19—6—74-ல் எம். எஸ். கணபதி நாடார் அண்ட் சன்ஸ் பவர்லூம் பாக்டரியில் வேலை செய்து வந்த தோழர் மகாலிங்கம அவர்களை எந்தக் காரணமும் இன்றி நிர்வாகம் வேலை நீக்கம செய்தது. தொழிற்சங்க பிரதிநிதிகள் தோழர் எம். தங்கசாமி, தோழர் ரா, சண்முகவேல் நிர்வாகத்திடம பலமுறை பேசியும், வேலைக்கு எடுத்துக் கொள்ள மறுக்கவே பாக்டரியில் சி. ஐ. டி. யூ. சங்கத்தை சேர்ந்த தொழிலாளர்கள் (பகல் சிப்ட் தொழிலாளர் அனைவரும்) உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தாகள். ஏ. ஐ. டி. யு. சி. சங்கத்தை சேர்ந்த தொழிலாளர்கள் (இரவு சிப்ட்) உள்ளிருப்பு வேலை நிறுத்தம நடந்து கொண்டிருக்கும்போது முதலாளிககு ஆதரவாக கருங்காலித்தன மாக வேலை செய்தார்கள்.

உள்ளிருப்பு வேலை நிறுத்தம்

உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்து கொண்டிருந்த சி. ஐ. டி. யு. தொழிலாளர்கள் வேலை பார்க்க வேண்டாம் என்று எவ்வளவோ மன்ருடியுமஏ.ஐ.டி.யூ.சி.யை சேர்ந்த தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டும் எனறு அவர்கள் தலைவர்கள் கட்டளையிட்டார்கள்.

கருங்காலி வேலை செய்து கொண்டிருந்த ஏ.ஐ.டி.யு.சி. தொழிலாளருக்குஆதரவாக முதாலாளியும் ஏ ஐ டி யூ சி தலைவர்களும் போலீசுக்கு புகார் செய்து உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களை வெளியேற்ற போலீஸ் வந்தது.

உடனே சி ஐ டி யூ சங்கத்தின் சார்பில் எல்லா பாக்டரிகளிலும் வேலைநிறுத்தம் செய்யுமபடி மெசேஜ் போன் ஏற்பாடு செய்து கொண்டிருக்கும்போது, போலீசுக்கு தகவல்தெரிந்து தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து நிர்வாகத்திடம் பேசி மீண்டும் வேலை நீக்கம செய்த தொழிலாளிதோழர் மகாலிங்கத்தை வேலைக்கு சேர்த்துக் கொள்வதாக நிர்வாகம பணிந்தது.

சந்திரசேகர் ஆசாத் சுதந்திரப் போராட்டத்தில் இல்லை

லட்சுமணபுரி. ஜூன். 28—

உத்தரபிரதேச அரசு "சுதந்திரப் போராட்டம உத்தர பிரதேசில்" என்ற பெயரில் ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளது.

இந்த புத்தகத்திலுள்ள சுதந்திரப் போராட்ட வீரர்களின் பட்டியலில் சந்திரசேகர் ஆசாத், ஆச்சாரிய நரேந்திர தேவ, ராம மனேகர் லோகியா ஆகியோர பெயர் சேர்க்கபபடவில்லை.

உ.பி.சட்டசபை கூட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்தபெருந்தவறை சுட்டிக் காட்டி இந்த புத்தகம விற்பனை செய்யப்படுவதைஒத்தி வைக்க வேண்டுமெனறு கேட்டுக்கொண்டனர்.

"தவறை தான்உணர்ந்து கொள்வதாகவும அடுத்த பதிப்பு வெளியிடும்போது எந்த பெயரும விடுபடாது" எனறும உ. பி. முதலமைச்சர் பகுகுணா அறிவித்தார்.

மதுரை மாவட்ட மாதர்சங்க மாநாடு தயாரிப்பு கூட்டங்கள்

மதுரை, ஜூன். 28—

வருகிறஜூலை 13, 14தேதிகளில நடக்கவிருக்கும் தமிழ் நாடு ஜனநாயக மாதர் சங்கத்தின் மதுரை—முகவை மாவட்ட மாநாட்டையொட்டி தயாரிப்புக்கூட்டங்கள் நடந்து வருகின்றன.

மதுரை 1-வது வார்டுதத்தனேரி பகுதி மாதர்கள் கூட்டம கடந்த 26-ந்தேதிதோழர் ஜெயலட்சுமி தலைமையில் நடந்தது. சுமார் 40 பேர் கலந்து கொண்டனர்.

மாவட்ட மாநாடுகுறித்தும மாதர் சங்க இயககங்கள் குறித்தும, மார்க்சிஸ்ட் கமயூனிஸ்ட்கட்சி நகர்க்குழு உறுப்பினர்கள் எம. கணபதி எம. முனியாண்டி, மாதர் சங்க மாநில நிர்வாகககுழு உறுப்பினர் சி. ரோகிணி ஆகியோர் பேசினர்.

மாவட்ட மாநாட்டுக்கு 3 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

செல்லூர் பகுதி

செல்லூர்பகுதி மாதர்கள் கூட்டம 27-ந் தேதயன்று தோழர் எஸ். முததமமாள தலைமையில்நடநதது சுமார் 30 பேர் கலந்து கொண்டனர்.

மாதர் சங்க மாவட்ட மாநாடு குறித்தும், மதுரை நகர் குழு பொருளாளர் பி. நாகம்மாள், ரோகிணி. எம். முனியாண்டி ஆகியோர் பேசினர்.

மாவட்ட மாநாட்டுப் பிரதிநிதிகளாக 5 தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நெல் ஊழலில் தனக்கு சம்பந்தமில்லையாம்

வரி கட்ட மறந்த ஜெகஜீவன்ராம் மகன் கூறுகிரு[illegible]

புதுடில்லி, ஜூன். 27—

நெல் கடத்தப்பட்டதில் தனக்கு சம்பந்தமில்லை என 12 ஆண்டுகள் வருமானவரி கட்டமறந்த மந்திரிஜகஜீவன் ராமின் மகன் சுரேஷ்குமார் மறுக்கிருர்.

உத்திர பிரதேசத்தின் டெராய் பகுதியிலிருந்து "விதை நெல்" என்று சொல்லி லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நெல் கடத்தப்பட்டிருப்பதாககூறப்படுவதில் தனக்கு சம்பந்தம் கிடையாதுஎன ஜெகஜீவன் ராமின் மகன் சுரேஷ்குமார் மறுத்தார்.

இவர் ஒருபோதும்டெராய் பகுதிக்கே போனதில்லையாம். நெல்கடத்தல்ஊழலில் அவரைசம்பந்தப்படுத்துவது ஆதாரமற்றதாம்.

12 ஆண்டுகள் வரி கட்ட மறந்த அமைச்சரின் [illegible]ன சுரேஷ்குமார் பீகா[illegible] மாநிலத்தின் உத்தர்தொகு[illegible]யின் எம். எல். ஏ. வுமாவா[illegible] அதனல் தன்மீது கூறப்ப[illegible]டுள்ள புகாரை மறுத்து [illegible] மாநில சட்டமன்ற சபாநா[illegible] கருக்கு கடிதம் எழுதியு[illegible]ளார்.

கேரளத்தில் வாலிபர்கள் பஸ் மறியல்

திருவனந்தபுரம், ஜூன். 2[illegible]

நேற்று கேரளமெங்[illegible] பஸ் கட்டண உயர்[illegible] கண்டித்து ஆயிரக்க[illegible]கான வாலிபர்கள பஸ் [illegible]யங்கள் முன் மறியல் [illegible]தினர்.

கேரளத்திலுள்ள 50 [illegible] நிலையங்கள் முன் இந்த [illegible]யல் நடந்தது. மறியலு[illegible] சோசலிஸ்ட் வாலிபர் [illegible]கம் அறைகூவல் விடுத்[illegible]தது.

தலைநகரிலுள்ள [illegible]ஞர் பஸ் நிலையம் முன் [illegible] வாலிபர்கள் மறியல் [illegible]தனர். இதனல் பஸ் [illegible] வரத்து பாதித்தது.

...ய அரசியல் பாருளாதார நிலை-4

ந்திய கம்யூனிஸ்ட் கட்சி(மார்க்சிஸ்ட்)மத்தியக்குழு தீர்மானம்

(நேற்றைய தொடர்ச்சி)

மதுரை. ஜூன். 30—

இந்திய நாட்டில் நிலவும் அரசியல், பொருளாதார நிலைமை பற்றி இந்தியக்கம்யூனிஸ்ட்கட்சி (மார்க்சிஸ்ட்)யின் மத்திய குழு நிறைவேற்றிய தீர்மானத்தின் மூன்று பகுதிகள் முந்தைய இதழ்களில் வெளியாகியுள்ளன. இன்று அதன் தொடர்ச்சி பின்வருமாறு:

இடதுசாரி, ஜனநாயக கட்சிகள் தங்களுடைய ஆக்கப்பூர்வமான பங்கினைச் செலுத்துவதன் மூலம்—வளர்ந்து வரும் மக்களின் அதிருப்தியை — ஜனநாயக இயக்கத்தின் முன்னேற்றத்திற்கான, மாற்றுக் கொள்கைக்கான ஒன்றுபட்ட இயக்கங்களிலும் போராட்டங்களிலும் முறைப்படுத்திக் கொண்டு செல்ல வேண்டும். இல்லையென்றால், வலதுசாரி பிற்போக்கு சக்திகளும், வகுப்பு வாத சீர்குலைவு சக்திகளும், ஆளுங்கட்சிகளுக்குள்ளேயே இருக்கும் போட்டிகோஷ்டிகளும் மக்களுடைய தடீர் எழுச்சிகளை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்வார்கள். இதுதான் மத்தியக் கமிட்டியின் கருத்தாகும்.

ஒற்றுமையே வழிகாட்டும் சக்தி

கடந்த சில மாதங்களில், இடதுசாரி ஜனநாயக சக்திகள் ஒன்றுபடுவதன் முக்கியத்துவத்தையும், அப்படி ஒன்றுபடுவதன் மூலம் ஏற்படும் பலனையும் நாம் கண்டிருக்கிறோம். அதுமட்டுமின்றி, இந்த மகத்தான ஒற்றுமை தான் மக்களுக்கு வழிகாட்டும் சக்தியாகவும் அமைந்துள்ளது.

கடந்த மே 3-ஆம் நாளன்று நாடு தழுவிய கண்டன நாள் அனுஷ்டிக்கும்படி பலவேறு இடதுசாரிக் கட்சிகள் அறைகூவல் விடுத்திருந்தன. இத்தகைய தொரு அறைகூவலானது, காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்கும், பிற்போக்கு கட்சிகளின் சூழ்ச்சிகளுக்கும் எதிரான மக்களுடைய போராட்டத்தில் முக்கியமானதொரு நிகழ்ச்சியாகத் திகழ்கிறது. இடதுசாரி ஜனநாயக கட்சிகளின் இந்த அறைகூவலுக்கு மக்கள் காட்டிய பேராதரவு மகத்தானதாகும்.

அதுமட்டுமின்றி, இந்தப் பேராதரவு காட்டியதன் மூலம், எல்லா இடதுசாரிக் கட்சிகளிடமிருந்து வரக் கூடிய அறைகூவலுக்கு தாங்கள் சரியான ஆதரவு கொடுப்பதற்கு தயார் என்பதை நகரங்களிலும், நகரப்புறங்களிலும் இருக்கும் உழைக்கும் வெகுஜனப் பகுதி மக்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். மேலும் காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்கு எதிராக உருவாகிக் கொண்டிருக்கும் போராட்டங்களில் தங்களது ஆக்கபூர்வமான பங்கினை செலுத்தமுடியும் என்பதையும் அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

வரலாற்றுப் புகழ்வாய்ந்த வேலைநிறுத்தம்

பிரம்மாண்டமான, சக்திவாய்ந்த இரயில்வேத்தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்ததானது, இதைவிட முக்கியமான தொன்றுகும், இந்நாட்டின் தொழிற்சங்க வரலாற்று ஏட்டில் இதற்கு முன்பு கண்டிராத ஒரு மாபெரும் வரலாற்றுப்புகழ் வாய்ந்த தொழிற்சங்க நடவடிக்கையாகும், இத்தகையதொரு வேலை நிறுத்தம் இந்தியாமுழுவதிலுமுள்ள இரயில்வே காலனிகளில் தீவிரமான அடக்குமுறை பயங்கரம் கட்டவிழ்த்து விடப்பட்டபோதிலும்) மூன்று வாரங்களுக்கு தொடர்ந்து நீடித்தது. இரயில்வே தொழிலாளர்கள் தங்களுடைய ஸ்தாபனங்களின் மீது ஆழ்ந்த விசுவாசத்தையும், நம்பிக்கையையும் காட்டினர்கள். ஆம் இந்த தொழிற்சங்க ஒற்றுமைக்கு மாபெரும் அளவில் உற்சாகம் அளித்து சாத்தியப்படுத்தியது எது? எல்லா இடதுசாரி கட்சிகளின் ஒன்று பட்ட ஆதரவுதான் இதற்குக் காரணமாகும்

புதிய அம்சம்

இரயில்வேத்தொழிலாளர்களின் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக மே 15 ஆம் தேதி யன்று பொதுவேலைநிறுத்தம் செய்யுமாறு எல்லா இடதுசாரி கட்சிகளும் சேர்ந்து அறைகூவல் விடுத்தன. நகரங்களிலும், மாநகரங்களிலும் உள்ள தொழிற்சாலைகளில் வேலைபார்க்கும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் மே 15 ஆம் நாளைய வேலைநிறுத்த அறை கூவலுக்கு மனப்பூர்வமாக ஆதரவு கொடுத்தனர் நகரங்களிலும், நகர்ப்புறங்களிலும் உள்ள முன்னேறியசக்திகள் முழுவதையும் பொதுவான போராட்டத்தில் ஒன்று திரட்டுவதற்கு இடதுசாரி, ஜனநாயக சக்திகளுடைய ஒற்றுமையின் பலமும் சக்தியும்தான் கடந்த சில மாதங்களில் புதிய அம்சமாக எழுந்துள்ளது இதற்காக வேண்டிதான் நமது கட்சி கடந்த சிலவருடங்களாக பாடுபட்டுவந்திருக்கிறது.

செயல் ஒற்றுமை வேண்டும்

எல்லா, இடதுசாரி ஜனநாயக சக்திகளும் செயலில் காட்ட வேண்டிய ஒற்றுமைதான் முன்னேறிய போராடும் சக்திகளின் தேவையாக இருக்கிறது. அதுமட்டுமின்றி, காங்கிரஸ் ஆட்சியாளர்களை எதிர்த்துப் பாராடும்போது வலதுசாரி சக்திகளை தடுத்து நிறுத்த வேண்டிய உத்திரவாதமாகவும் இந்த ஒற்றுமை அமையும். இதை யாராலும் மறுக்க முடியாது. மேலும் இந்த ஒற்றுமையின் மூலம் தான் போராட்டத்தில் ஆட்சியாளர்களின் சவாலையும் அடக்குமுறை பயங்கரத்தையும் தைரியமாக எதிர்த்து நிற்கவும் மக்களால் முடியும்.

காங்கிரசிற்கு மாற்றான கொள்கைகளின்பால ஏதாவது ஒரு வகையிலான சிறிதளவான இணக்கமாவது உருவாக்கி, பேலும் ஒரு படி முன்னேற வேண்டுமானல், இந்த ஒற்றுமை மிக மிக அவசியமாகும். மேலும், இப்போது பல இடங்களில் தானகவே இயக்கங்கள் எழுந்து வரும் ஆரம்பக் கட்டத்திலிருந்து விடுபட்டு, அந்த இயக்கங்களுக்கு ஒரு உருவம் கொடுக்க வேண்டுமானல் இந்த செயல் ஒற்றுமையால்தான் முடியும். போராட்டத்தின் திட்டவட்டமான கோரிக்கைகளுக்கும் இடதுசாரி, ஜனநாயக சக்திகளின் செயல் ஒற்றுமை தான் பிரதானமாகத் திகழ்கிறது.

வலது கம்யூ.வின் வர்க்க சமரசக் கொள்கைகள்

ஆனல், இடதுசாரி ஜனநாயக ஒற்றுமையின் வளர்ச்சிக்கான இந்த ஜீவாதாரமான போராட்டத்தில், வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி தலைமை கடைப்பிடிக்கும் வர்க்க சமரசக் கொள்கைகள் — சீர்குலைவுக்கான ஊற்றாகவும், அபாயகரமான முட்டுக்கட்டையாகவும் இருக்கின்றன என்று மத்திய கமிட்டி கருதுகிறது.

வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை கடைப்பிடிக்கும் வர்க்க சமரச அடிப்படைக் கொள்கையினல். அந்தக் கட்சி போராட்டங்களில் சேருவது தடுக்கப்படுகிறது. அப்படியே சேர்ந்தாலும், இரயில்வே வேலைநிறுத்தத்தில் செய்தது போல, வெகு ஜனங்களுக்கு துரோகம் செய்கிறது. காங்கிரஸ் கட்சியுடன் தங்களுக்கு இருக்கும் கூட்டுகாரணமாக ஏற்பட்டிருக்கும் நிர்ப்பந்தத்திற்கு சரணடைந்து, வலது கம்யூனிஸ்டு தலைவர்கள் இரயில்வே வேலை நிறுத்தத்தை காட்டிக் கொடுத்தார்கள் என்பது வெளிப்படையான ரகசியமாகும்.

இரட்டைவேடக் கொள்கை

மக்களும், அவர்கள் நடத்தும் போராட்டங்களும் கொடுக்கும் சம்மட்டி அடிகள் தாங்காமல், மேற்குவங்கத்தில் கூடத்தகாத கூட்டணியான—முற்போக்கு ஜனநாயக கூட்டணி உடைந்து போனலும், காங்கிரஸ் கட்சியுடன்முன்போலவே ஒத்துழைப்பு நீடிக்கும் என்று இன்னமும் வலது கம்யூனிஸ்டு தலைமை உறுதிக்கு மேல் உறுதி கொடுத்த வண்ணமாக இருக்கிறது. வர்க்க சமரசக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் வலது கம்யூனிஸ்டு தலைமை உறுதிக்கு மேல் உறுதி கொடுப்பது கண்டு நாம் ஆச்சரியப்படவில்லை.

இன்று வலது கம்யூனிஸ்ட் தலைவர்களைப் பின்பற்றும் ஜனங்கள் உட்பட சகல பகுதி வெகுஜனங்களுக்கும் தலைமை தாங்கும் ஜனநாயக இயக்கத்தின் இலட்சியத்திற்கும் வலது கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை கடைப்பிடிக்கும் இந்த இரட்டை வேடக் கொள்கை மிகப் பெருங்கேடு விளைவித்துக் கொண்டிருக்கிறது.

கொள்கைத் தடுமாற்றங்களும் ஊசலாட்டங்களும்

காங்கிரஸ் அரசாங்கம் மக்களை மூர்க்கத்தனமாக தாக்குவதும், ஏகபோகங்கள். நிலப்பிரபுக்கள் ஆகியோருடன் சமரசம் செய்து கொள்வதும் மிக அப்பட்டமாகத் தெரிகிறது. அதனல் தான் வலது கம்யூனிஸ்டு தலைவர்கள் கடந்த காலத்தில் மத்திய காங்கிரஸ் அரசாங்கத்தை ஆதரித்து வந்ததுபோல, இப்போது ஆதரிக்க முடியவில்லை. மத்திய காங்கிரஸ் அரசாங்கத்தை அவர்கள் மிகக் கடுமையாக கண்டிக்கும் நிலைக்கு வந்திருக்கிறார்கள். இதன் மூலம் அவர்களுடைய கொள்கைக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

இதனல், அவர்களுக்கு மேலும் மேலும் பெரிய அளவில் கொள்கைத் தடுமாற்றங்களும், அடிக்கடி ஊசலாட்டங்களும வளர்ந்து வருகின்றன. ஏற்கனவே வெகுஜன இயக்கம் கொடுத்திருக்கும் நிர்ப்பந்தத்தினல், வலது கம்யூனிஸ்ட் தலைவர்களும், அவர்களுடைய தொழிற்சங்க அமைப்புகளும் மிகப்பெரிய ஒன்றுபட்ட வேலை நிறுத்தங்களில் சேர வேண்டிய நிலை ஏற்பட்டது, நாட்டில் நடக்கின்ற நிகழ்ச்சிகளின் நிர்ப்பந்தத்தினல் அவர்கள் இரயில்வே வேலை நிறுத்தத்தை ஆதரிக்க நேர்ந்தது. அதுமட்டுமின்றி, அரசாங்கத்தின் அடக்குமுறையானது தொழிலாளி வர்க்கத்தின் மீது தொடுத்திருக்கும் யுத்தமாகும் என்றும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

கேரளத்திலும் அடக்குமுறை

முற்போக்கான கொள்கைகளிலிருந்து அரசாங்கம் பின் வாங்குவதாக அவர்கள் குற்றம் சாட்டுவதோடு மட்டுமல்லாமல், அராங்கத்தின் அதிகாரபூர்வமான கொள்கைகளுக்கு எதிராக ஒன்றுபட்ட நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கவும் அவர்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

ஆனல் வலது கம்யூனிஸ்ட் கட்சியானது இன்னமும் தொடர்ந்து கேரள அரசாங்கத்தில்இருந்துகொண்டு வருகிறது.

ஆம், வேலைநிறுத்தம் செய்த ரயில்வே தொழிலாளர்களின் மீது இதர இடங்களில் எப்படி எல்லாம் காங்கிரஸ் அரசாங்கங்கள் அடக்குமுறையை ஏவி விட்டனவோ, அதே போலத்தான் கேரளாவிலும் ஆட்சியாளர்கள் ஏவி விட்டனர். இப்படிப்பட்ட கேரள அரசாங்கத்தில்தான் வலது கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து நீடித்துக் கொண்டு வருகிறது. இதர இடங்களில் ரயில்வேத் தொழிலாளிகளும், மத்திய அரசு ஊழியர்களும் எப்படிப்பட்ட அடக்குமுறைக்கு உட்பட்டனரோ, அதே போலத்தான் கேரளாவிலும் அவர்கள் அடக்குமுறைக்கு உட்பட்டனர்.

இரயில்வே மற்றும்மத்திய அரசு ஊழியர்களின் தலைவர்கள் இந்தியப் பாதுகாப்புசட்டம்பராமரிப்புச்சட்டம ஆகியவற்றின் கீழ் கைது செய்யப்பட்டனர். இரயில்வே வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டு மூன்று வாரங்கள் ஆகிய பின்னரும் கூட, அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் இன்னமும் நீடிக்கின்றன.

(நாளை முடியும்)

மதுரை பி. ஆர். சி தொழிலாளர்கள் போராட்டம்

5 வது அணி உண்ணுவிரதம்

மதுரை, ஜூன். 28—

மதுரை பாண்டியன் போக்குவரத்துத் தொழிலாளர்கள் கடந்த 24 ந் தேதி முதல் தொடர் உண்ணுவிரதப்போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

உண்ணுவிரதத்தின் 6 வது நாளான கடந்த வெள்ளிக்கிழமை யன்று சி. ஐ. டி. யூ. சார்பில் ஏ. கருப்பையா (கண்டக்டர்), கே. குருசாமி (பராமரிப்பு) அ தி மு க சங்க துணைத்தலைவர் வி. வீராச்சாமி ஆகிய தோழர்கள் உண்ணுவிரதம் மேற்கொண்டனர்,

சம்பள உயர்வு, பஞ்சப்படி 30 சத போனஸ், சங்க அங்கிகாரம் முதலிய 12 அம்சக்கோரிக்கைகளுக்காக சி. ஐ. டி. யூ, சங்கமும் அ தி மு க சங்க மும் கூட்டாக இரண்டாவது கட்டமாக இப்போராட்டத்தை நடத்தி வருகின்றன.

5 வது நாள் உண்ணுவிரதத்தை 'தீக்கதிர்' உதவி ஆசிரியர்தோழர் இரா.நாராயணன் துவக்கி வைத்துப் பேசினர்.

ஆதரவு

நெசவாளர் தலைவர் வி. பாலகிருஷ்ணன், நகர்க்குழு உறுப்பினர் கே. பூச்சி 9 வது வார்டு, மதிச்சியம் கிளை மார்க்சிஸ்ட் கட்சித் தோழர்களும், தட்சிண இரயில்வே எம்பளாஸ்யூனியன் தோழர்களும். 20வது வார்டு மாதர் சங்கத்தோழர்களும் அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்களும் திரளாக வந்து உண்ணுவிரதத் தோழர்களைச் சந்தித்தும் போராட்ட நிதி எலுமிச்சம் பழங்கள் அளித்தும் ஆதரவு நல்கி வருகின்றனர்.

பி. ஆர். சி. தொழிலாளர்கள் யூனிபாரத்துடன் (சீருடை] வந்து தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

சிவகிரியில் மணவாளன்குழு

சிவகிரி, ஜூன்; 28—

சிவகிரி குமாரபுரத்தில் இராமமூர்த்தி மன்றம் சார்பில கடந்த 23-ந்தேதியன்று பொதுக்கூட்டம் நடந்தது. தோழர் பி. முத்துமாரி தலைமைவகித்தார்.

தோழர்கள் நமசிவாயம், கே. கோதண்டராமன், எம். பாண்டியன், ஆகியோர் பேசியபின், மதுரை மணவாளன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

ஜனதிபதி, உப-ஜனதிபதி தேர்தல்

காங்கிரஸ் வேட்பாளர்கள்

புதுடெல்லி, ஜூன், 27—

இந்திய ஜனதிபதி தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராக மத்திய விவசாயத்துறை அமைச்சர் பக்ருதீன்அலி அகமது நிறுத்தப் படுவார் என்று தெரிகிறது.

கட்சியின் முதிர்ந்த தலைவர்களும், மாநில முதலமைச்சர்கள். மத்திய. மாநில அமைச்சர்களும் பக்ருதீன் அலியையே வேட்பாளராக நிறுத்த சம்மதம் தெரிவித்துள்ளார்களாம்.

உதவி ஜனதிபதிக்கு, ஒரிசா கவர்னர் பி. டி. ஜாட்டி, மத்திய தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி. சுப்ரமண்யம், டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைககழக துணைவேந்தர் ஜி. பார்த்தசாரதி, இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் திருமதி மரகதம்சந்திரசேகரன் ஆகியோரது பெயர்கள் அடிபடுகின்றன.

வேட்பாளர்கள் குறித்து பரிசீலிக்க காங்கிரஸ் கட்சியின் மத்திய பார்லிமெண்டரி போர்டு கூட்டம் 28ம் தேதி கூடுகிறது.

திண்டுக்கல் பி. ஆர். சி தொழிலாளர்களும் உண்ணு விரதம்

திண்டுக்கல், ஜூன். 28—

சம்பள உயர்வு, 30 சத போனஸ், பஞ்சப்படி முதலிய 12 அம்சக்கோரிக்கைகளை வற்புறுத்தி திண்டுக்கல் பஸ் ஸ்டாண்ட் முன்பு தொடர் உண்ணுவிரதம் நடந்துவருகிறது,

இந்த உண்ணுவிரதப் போராட்டம் பாண்டியன் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கத்தின் (சி. ஐ. டி. யூ.) திண்டுக்கல் கிளை சார்பில் நடக்கிறது.

24 ந் தேதி யன்றுதோழர் டி. சேசுதாசும். 25 ந் தேதி யன்று தோழர்கள் எஸ். காணிக்கைராஜ், பாண்டுரங்கன் ஆகியோரும். 26 ந் தேதி யன்று தோழர்கள் ஜி. அந்தோணிசாமி, என். ராஜு ஆகியோரும் உண்ணுவிரதம் மேற்கொண்டனர்.

உண்ணுவிரதத் தோழர்கள் நாள் தோறும் காலையில் ஊர்வலமாக வந்து உண்ணுவிரதம் துவங்குகின்றனர்.

உண்ணுவிரதப் போராட்டத்துக்கு நகரில் உள்ள சீனிவாசா பஸ் கம்பெனித் தொழிலாளர்களும், தோல் பதனிடும் தொழிலாளர்களும் மற்றபகுதி உழைப்பாளர்களும தொடர்ந்து ஆதரவு அளித்து வருகின்றனர்.

'பங்களாதேஷ் - பாகிஸ்தான் நட்பு நீடூழிவாழ்க'

பூட்டோ வரவேற்பில் பங்களாதேஷ் மக்கள் முழக்கம்

டாக்கா, ஜூன் 28—

'பங்களாதேஷ்-பாகிஸ்கான் நட்பு நீடூழி வாழ்க!'' என்ற முழக்கத்துடன் பாகிஸ்தான் பிரதமர் பூட்டோவை பங்களாதேஷ் மக்கள் வரவேற்றனர்.

தனது 3 நாள் பங்களாதேஷ் பயணத்தையொட்டி கடந்த 26-ந் தேதியன்று காலை விமானம் மூலம் பூட்டோ டாக்கா வந்து சேர்ந்தார்.

கிழக்கு பாகிஸ்தான் சுதந்திர பங்களாதேசமாக ஆனதற்குப் பின்பு முதன் முறையாக இங்கு வந்த பூட்டோவுக்கு, உற்சாகமான முறையிலும் சிறப்பான முறையிலும் வரவேற்புடன் அளிக்கப்பட்டது.

பாகிஸ்தான் பிரதமர் பூட்டோ, தற்காப்பு அமைச்ச அஜிஸ் அகமது, வெளிநாட்டு இலாகா செயலாளர் ஆகாசாஹி, பத்திரிகை நிருபர்கள், எம். பி கள் உட்பட 107 பிரதிநிதிகள் கொண்ட அவரது விமானம் டாக்கா விமான நிலையம் வந்திறங்கியதும், பீரங்கிகள் 19 முறை முழங்க, இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்பளிக்கப்பட்டது.

ஆரத்தழுவினர்

அங்கு திரளாக கூடியிருந்த மக்கள்'பாகிஸ்தான் நீடூழி வாழ்க! பங்களாதேஷ் பாகிஸ்தான் நட்பு நீடூழி வாழ்க!'' போன்ற முழக்கங்களை விண்ணதிர எழுப்பி வரவேற்றனர்.

பங்களாதேஷ் பிரதமர் முஜிபுர் ரகுமானும் மற்றைய அமைச்சர்களும வரவேற்றனர். பூட்டோவும் முஜிபுரும் ஒருவரை யொருவர் ஆரத்தழுவிக்கொண்டனர்.

பின்னர் புட்டோவும் முஜிபுரும் வங்க பவனத்தில் பேச்சு வார்த்தை நடத்தினர்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

1971-ல் நடந்த பங்களாதேஷ் விடுதலைப் போரின் போது, பாகிஸ்தான் இராணுவத்தினல்கொடுமைகளுக்கு ஆளான குடும்பங்களைச் சார்ந்த ஏராளமானோர் விமான நிலையம் அருகே கூடி பூட்டோ வந்தடைந்ததும் எதிர்ப்பு கோஷம் எழுப்பினர். கற்களையும், செருப்புக்களையும் வீசினர்.

பாக். குடிமக்கள் ஆர்ப்பாட்டம்

இங்குள்ள பாகிஸ்தானியக் குடிமக்கள் தங்களை பாகிஸ்தானுக்கே திரும்பவும் அழைத்துக் கொள்ளும்படி வற்புறுத்தி முழக்கம் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

15 தினங்களாக மதுரை பெரிய ஆஸ்பத்திரியில் 'ஆபரேசன்கள்' இல்லை

மதுரை, ஜூன். 28—

மதுரையில் உள்ள அரசினர் மருத்துவமனையில் (பெரிய ஆஸ்பத்திரி) கடந்த பத்து— பதினைந்து தினங்களாக ஆபரேசன்களே நடப்பது இல்லையாம்.

இதற்குக்காரணம், ஆபரேசன் செய்யப்படும்நோயாளிகளுக்கு தரப்படும் மயக்க மருந்தான 'நைட்ரஸ் ஆக்சைடு'' இல்லாததே காரணமாம்.

இதனல், அவசர அவசியமாக பெரிய ஆபரேஷன் செய்யவேண்டிய நோயாளிகள் யாரும் புதிதாக அனுமதிக்கப்படுவதில்லையாம்:

ஏற்கனவே உள்ள 'ஆபரேசன் கேஸ்கள்' எல்லாம் தொடர்ந்து ஒத்திப் போடப்பட்டுவருகின்றனவாம்.

இதனல் நோயாளிகள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளார்கள்,

கடந்த 15 தினங்களாக இந்த நிலை நீடித்துள்ள போதிலும் இது சம்பந்தமாக மருத்துவமனை அதிகாரிகளோ, அரசினரோ எவ்வித கவலைப்பட்டதாகவோ-நடவடிக்கை எடுத்துள்ளதாகவோ தெரியவில்லை.

—ந. நி.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ் மாநிலக்குழு சார்பில் தீக்கதிர் அச்சகத்தில் (6/16 பைபாஸ் ரோடு மதுரை,6250 18) அச்சிட்டு வெளியிடுபவர் ஆசிரியர் கே. முத்தையா.